Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 242

புதன்கிழமை 26 ஜூலை 2023

ஆடி 10 ஆம் நாள் – வள்ளுவர் 2054




## யாழில் அரச ஊழியர் போதையில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 26
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியரால், அரச அலுவலர் மீது நேற்று மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, »15



நல்லூரில் நேற்று

## கர்தினாலுக்கு கந்தன் கருணை

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பிறாயன் »15

மனிதப்புதைகுழி விவகாரம்;

## ஹர்த்தாலுக்கு பேராதரவு யாழ்.பல்கலை அறிவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 26
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், சர்வதேசக் கண்காணிப்பை வலியுறுத்தியும், நாளைமறுதினம் 28ஆம் திகதி »15

ஏமாற்று வித்தையெனில்

# சர்வகட்சிப் பேச்சிலிருந்து உடன் வெளியேறுவோம்!

சஜித் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 26
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாடானது, அரசியல் ஏமாற்று வித்தையென்று தெரியவந்தால், அந்த நிமிடமே பேச்சிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி வெளியேறும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். »15

## ‘13’இனை முழுமையாக நடைமுறைப்படுத்துக!

சு.க. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 26
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை »15

## தமிழர்கள் மீதான அராஜகத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துக

இரா.சம்பந்தன் அறிக்கை



கொழும்பு, ஜூலை 26
இனவாத அமைப்புகள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகிய தரப்பினர் மக்கள் மீது அரங்கேற்றும் அராஜகச்செயல்களைக் கைகட்டி வேடிக்கை பார்க்கா »15

## வல்வெட்டித்துறையில் நேற்று கறுப்பு ஜூலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 26
கறுப்பு ஜூலைப் படுகொலைகளின்போது கொலையுண்டோரினதும், வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட தங்கத்துரை, »15








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குருந்தூர் தொன்மம் அழிப்பு: இந்தியாவின் தலையீடு தேவை

## தென் கயிலை ஆதீனம் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜுலை 26**

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஆலய வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு - சிவ வழிபாட்டுத் தொன்மங்கள் அகற்றப்பட்டு- நீதிமன்றக் கட்டளையை புறந்தள்ளி பௌத்த விகாரை அமைக்கப்படுகிறது. ஆதிசிவன் ஆலயத் தொன்மம், வழிபாட்டுரிமையைப் பாதுகாக்க இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.**

- இவ்வாறு தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்காலமாக ஆதிசிவன் திருக்கோயில்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சைவத்தமிழ் தொன்மங்கள் பௌத்த - சிங்கள தொன்மங்களாக மாற்றப்படுகின்றமை வடக்கு - கிழக்கில் தொடர்கதையாகவுள்ளது.

கடந்த வாரம் குருந்தூர்மலை ஆதிசிவன் கோவில் வளாகத்தில் சைவவழிபாட்டுக்கு நீதிமன்றக் கட்டளையும் மீறித் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளபோதிலும் புத்தருடைய சொரூபம் வைக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் நீதிமன்றச் சுயாதீனத்தை மீண்டும் மீண்டும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

குருந்தூர்மலையில் ஏற்படுத்தப்பட்டுவரும் அமைதியின்மை மத நல்லிணக்கத்தை ஆழமாகப் பாதித்து இடம்பெறும் இனவிரிசல் என்பன தடுக்கப்படவேண்டும்.

நாட்டின் நீடித்த நிலையான சமாதானத்திலும், அபிவிருத்தியிலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதிலும் பங்காற்றும் இந்தியா, இந்த விவகாரங்களில் எமது ஆதிசிவ வழிபாட்டு மரபுரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

தமிழ்மக்களின் பூர்வீக நிலப்பரப்பில் வழிபாட்டுரிமைகளை மதித்து, தொன்மங்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்க முடியும்-என்றுள்ளது. (ச-66,125)



# கைவிரல் பதிவு இயந்திரங்கள் இயங்காததால் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜுலை 26

ஒன்லைன் ஊடாகக் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக கைவிரல் அடையாளம் வைக்கும் இயந்திரம் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் பழுதடைந்துள்ளது. பழுதைச் சீர்செய்வது தொடர்பில் பொறுப்பற்ற வகையில் அலுவலர்கள் பதிலளிக்கின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்பவர்கள் கைவிரல் அடையாளம் வைப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில், சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பவற்றில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திலுள்ள இயந்திரம் கடந்த இரு வார காலமாக பழுதடைந்துள்ளது.

பழுதடைவு தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்தால் நாம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைத் தெரிவு செய்திருப்போம்.

இயந்திரம் எப்போது சீராகும் என வினாவினால் , கொழும்பில் இருந்து தொழில்நுட்பவியலாளர்கள் வரவேண்டும் எனப் பதிலளிக்கப்படுகிறது.

அதனால் கைவிரல் அடையாளம் வைக்க முடியாத நிலையில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளோம்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இயந்திரத்தின் பழுதை சீர்செய்ய வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-20)

# நீதிபதிகளின் வருமான வரி இடைக்காலத் தடை நீக்கம்

கொழும்பு, ஜுலை 26

நீதிபதிகளின் சம்பளத்தில் வருமான வரி அறவிடுவதைத் தடுக்கும் வகையில் விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை மேலும் நீடிக்காமல் இருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன தலைமையிலான ஐவரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பெரும்பான்மையான நீதிபதிகளின் இணக்கப்பாட்டின் பேரில், இடைக்கால உத்தரவை நீடிக்க வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்ட ஐவர் அடங்கிய அமர்வு, இந்த வழக்குத் தொடர்பான ஆட்சேபனைகள் இருந்தால் ஒகஸ்ட் 31ஆம் திகதிக்குள் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டது. இந்த மனுக்கள் மீதான விசாரணை செப்ரெம்பர் 22ஆம் திகதி நடைபெற உள்ளது. (எ-இ)

# சமிக்ஞையை மீறிய 2 பேர் சூடு நடத்தி கைது!

அம்பாறை, ஜுலை 26

அம்பாறை - திகவாபி பிரதான வீதியில் சமிக்ஞைக்கு அருகில் நிறுத்துமாறு பொலிஸாரின் உத்தரவை மீறி பயணித்த இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பின்பக்கம் இருந்து பயணித்தவர் காலில் காயமடைந்த நிலையில் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளாரெனவும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3)

# காணி அளவீட்டு நடவடிக்கை மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜுலை 26

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டில் தனியார் காணி ஒன்றை கடற்படைக்காகச் சுவீகரிக்கும் முயற்சி நேற்று மக்கள் எதிர்ப்பால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தனியார் காணி ஒன்றைக் கடற்படைக்காகச் சுவீகரிப்பதற்காக நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் நேற்று அங்கு சென்றிருந்தனர். அவர்களை வழிமறித்த காணி உரிமையாளர்கள், கிராம மக்கள், மக்கள் பிரதிநிதிகள் காணி அளவீட்டு நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எழுத்துமூல கடிதம் ஒன்று தர வேண்டும் என்று நில அளவைத் திணைக்கள அதிகாரி கோரிய நிலையில், காணி உரிமையாளர், வடமராட்சி கிழக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், கஜேந்திரகுமார், காணி உரிமைக்கான மக்கள் இயக்க உறுப்பினர் இ.முரளிதரன், வடமராட்சி கிழக்கு மக்கள் ஒன்றியத்தின் பிரதிநிதி கனைச்செல்வன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வசந்தகுமார் ஆகியோர் ஒப்பமிட்டுக் கடிதத்தை வழங்கினர். அதன்பின்னர் காணி அளவீட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தி அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர்.

அதேவேளை, நேற்றுமுன்தினமும் கடற்படையினருக்கான காணி சுவீகரிப்புக்காக காணி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையில் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது. வடமராட்சி கிழக்கில் கடற்படையினருக்கான காணி சுவீகரிப்புகளுக்கான அளவீட்டு நாள்கள் நேற்றுமுன்தினம் முதல் 5 நாள்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

# வேலணை மத்திய கல்லூரி புதிய அதிபரை மாற்றுங்கள்

## மாணவர்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 26

வேலணை மத்திய கல்லூரிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபரை மாற்ற வேண்டும் என்று கோரி நேற்று மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணை மத்திய கல்லூரிக்கு வட மாகாண கல்வி அமைச்சால் நேர்முகத் தேர்வு அடிப்படையில் புதிய அதிபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே மாணவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

எமது பாடசாலை 80 வருட கால இந்துப் பாரம்பரியத்தைக் கொண்ட பாடசாலையாகக் காணப்படுகின்றது. எமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களே. திருக்கேதீஸ்வர திருவிழாவும் எங்களது பாடசாலையில் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபர் எமது மத சம்பிரதாயங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் கொண்டவராக இல்லை. பாடசாலையின் இந்துப் பாரம்பரியங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கவனவீர்ப்பில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (எ-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊழலுக்கெதிரான சட்டத்தின் சுயாதீனத்தை உறுதிசெய்க!

*சமூக நீதிக்கான இயக்கம் வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 26

**நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை, நிறைவேற்றியதுடன் நின்றுவிடாது அதன் முழுமையான பங்களிப்பை நாட்டுக்கு வழங்குவதற்கு அனைத்துத் தரப்புகளும் செயற்படவேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

ஆரம்பக்கட்டமாக ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவை நிறுவும் போது அதை வினைத்திறன் மிக்க - உற்சாகமுடைய- தலையீடுகள் இன்றி இயங்கும் வகையில் உறுதிசெய்ய வேண்டும்.

இதற்காக நியமிக்கப்படும் ஆணையாளர்கள் குறுகிய அரசியல் நோக்கம் இல்லாத, சமூகத்தின் நன்மதிப்பைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

இந்த ஆணைக்குழுவின் கீழ் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, முழுமையான சுயாதீனத்தன்மையை உறுதி செய்யும் வகையில் பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கை இருக்க வேண்டும்.

புதிய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர், அவர்களின் விசாரணையின்பின் மேற்கொள்ளும் அனைத்து வழக்கு நடவடிக்கைகளையும் துரிதமாக நிறைவுறுத்த வேண்டும். அதனூடாக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான உண்மையான அர்ப்பணிப்பை நாட்டுக்கும் உலக நாடுகளுக்கும் வெளிப்படுத்தவேண்டும்.

நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் ஊடாக முழுமையான பங்களிப்பை நாட்டுக்கு வழங்குவதற்கு அனைத்துத் தரப்புகளும் செயற்படவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# அமைச்சு ஆசையால் உடைகிறது பெரமுன

கொழும்பு, ஜூலை 26

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சிப் பணிகளில் இருந்து விலகி இருக்கின்ற அதே நேரம், சிலர் புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

நிமால் லான்சா, விஜயதாஸ ராஜபக்ச, அநுரபிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே, டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன உள்ளிட்ட பலர் அந்தக் கட்சியில் இணையவுள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, மொட்டுக் கட்சியில் உள்ள மேலும் சிலர் ஐக்கிய தேசியக் கட்சி - மொட்டுக் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (எ-22)

# அமைச்சு விடயத்தில் ரணில் உடும்புப் பிடி!



கொழும்பு, ஜூலை 26

மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளை வழங்கி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தனது பிரதிநிதி ஒருவரிடம் தெரிவித்துள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அமைச்சுப் பதவிகள் கேட்டுப் போராடி வருகின்றனர். அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாததால் கடும் அதிருப்தியில் இருக்கும் அந்த 10 பேரும் ஒரு வருடத்தைக் கடந்த போதிலும் அமைச்சுப் பதவிகளுக்கான போராட்டத்தை இன்னும் கைவிடவில்லை.

கடந்த வாரம் அந்த 10 பேரில் ஒருவரான நாமல் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான போராட்டத்தைத் தாம் கைவிடவில்லை என்றும், தமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காவிட்டால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் கூறினார்.

இந்தத் தகவல் குறித்த பிரதிநிதியால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள அவர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை" என்று தனது பிரதிநிதியிடம் ஜனாதிபதி பதலளித்தார் - என்றுள்ளது. (எ-22)

# தேசிய, மாகாணப் பாடசாலைகள் வகைப்படுத்தலால் பயனில்லை!

*நாடாளுமன்றத் தெரிவுக்குழு சுட்டிக்காட்டு*

மாகாணப் பாடசாலைகள், தேசியப்பாடசாலைகள் என்றகட்டமைப்பை மாற்றி அனைத்துப் பாடசாலைகளுக்கும் பொதுவான தேசிய வேலைத்திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் தெரிவுக்குழுவால் விடுக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

தற்போது கல்வி வியாபாரமாக மாறி வருகிறது. ஆரம்ப, இடைநிலைக்கல்வி என்பன தனியார் கல்வி கலாசாரமாக மாறியுள்ளது. பெற்றோரும் தமது பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெறவேண்டுமென பல சிரமங்களுக்குமத்தியில் தனியார்கல்வி நிலையங்களுக்கு அனுப்புகின்றனர். தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் கல்வியின் போட்டித்தன்மை ஆரம்பமாகியுள்ளது. பெற்றோரும் அளவுக்கதிகமான அழுத்தத்தை சிறுவர்கள் மீது பிரயோகித்து வருகின்றனர்.

மாகாணப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகள் என்ற கட்டமைப்பை மாற்றி அனைத்துப் பாடசாலைகளுக்கும் பொதுவான தேசிய வேலைத்திட்டம் வேண்டும். மாகாண,தேசிய பாடசாலைகள் என வேறுபடுத்துவதில் எதுவித பிரயோசனமும் இல்லை - என்றுள்ளது. (ச-6)





**நெடுந்தீவில 9 மாதக் குழந்தையொண்டு பால் புரைக்கேறிச் செத்ததும், அந்தக் குழந்தையின்ர 'பொடியோட' தாயை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில அம்புலன்ஸுக்குள்ளையே இறங்க விடாமல் மணித்தியாலக் கணக்கில சிப்பிலியாட்டின சங்கதியையும் பேப்பரில வாசிச்சிருப்பியள். அந்தச் சம்பவத்தை முழுசாச் சொன்னால் தான் உங்களுக்கும் நடந்த அக்கிரமம் விளங்கும்.**

**பால் குடிச்சுக்கொண்டிருந்த பிள்ளை பேச்சுமூச்சில்லாமல் கிடக்கே எண்டு, நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்குத்தான் முதல் கொண்டு போனவை. அங்க சோதிச்ச டொக்டர் குழந்தை முதலே செத்துப் போச்சு எண்டு சொல்லிட்டார். நெடுந்தீவில மரணவிசாரணை அதிகாரி இல்லை. அதால குழந்தையின்ர 'பொடியை' தாய், தகப்பனிட்ட ஒப்படைக்கிறதோ? இல்லாட்டி போஸ்ட்மர்ட்டம் செய்யிறதோ? எண்டு நெடுந்தீவு டொக்டர் பெரியாஸ்பத்திரிக்கு போன் பண்ணிக் கேட்டிருக்கிறார். "போஸ்மர்ட்டம் பண்ணித்தான் 'பொடியை ' குடுக்கலாம். இஞ்ச அனுப்புங்கோ" எண்டு பெரியாஸ்பத்திரியால சொல்லுப்பட்டிருக்கு. 'பொடியை' யாழ்ப்பாணம் கொண்டு போறதுக்காக நெடுந்தீவுப் பொலிஸுக்கு டொக்டர் போன் பண்ணினால், அவை கோலை எடுக்கவேயில்லையாம். பொலிஸ் இப்பிடி அலட்சியமா இருந்ததால, வேற வழியில்லாமல் வேலணை ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் மூலமா பெரியாஸ்பத்திரிக்கு குழந்தையின்ர 'பொடியை' தாயோட அனுப்பிறதுக்கு நெடுந்தீவு டொக்டர் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்.**

**தாயும் குழந்தையின்ர 'பொடியோட' படகால வந்து, அம்புலன்ஸில ஏறி பெரியாஸ்பத்திரிக்கு வந்தால் 'அம்புலன்ஸில எப்பிடி பொடியை கொண்டு வருவீங்கள்? எண்டு 'ஓ.பி.ரீ' யில நிண்டவை பாயத் தொடங்கிட்டினம். பிறகு 'பொலிஸ் வந்து ரிப்போர்ட் தந்தால் தான் போஸ்ட்மர்ட்டம் செய்யலாம். அதுவரைக்கும் பொடியை அம்புலன்ஸில இருந்து இறக்க ஏலாது' எண்டு புதிசா ஒரு ரூல்ஸைச் சொல்லி அழிச்சாட்டியம் செய்திருக்கினம். ஆனால் அந்த ரூல்ஸுக்கும், 'பொடியை' அம்புலன்ஸால இறக்கிறதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. முதல்ல ஒரு பிணம் வந்தால் அதை இறக்கி, என்ன ஏதெண்டு பாக்கிறதுதான் நடைமுறை.**

**கண்ணுக்கு முன்னால பச்சைப் பிள்ளையைப் பறிகொடுத்த வேதனையோட இருக்கிற தாயை, தங்கட 'ஈகோ' பிரச்சினையால மணித்தியாலக் கணக்கா அம்புலன்ஸுக்குள்ள அடைச்சு வைக்கிறது எந்த வகையில நியாயம்? சரி, என்ன ரூல்ஸ் இருந்தாலும் மனிதாபிமானம் எண்ட ஒண்டு இருக்கெல்லோ, அது அங்க நிண்டவைக்கு துளியும் இல்லாமல் போட்டுது போல. இப்பிடி ஒரு பிரச்சினை இருக்கெண்டால், உடன அதைப்பற்றி பெரியாஸ்பத்திரி நிர்வாகத்துக்கு அறிவிச்சு, அதை உடன தீர்த்திருக்கலாமே. ஆனால் இவ்வளவும் நடந்த பிறகும் பெரியாஸ்பத்திரிப் பணிப்பாளருக்கு ஒருத்தரும் மூச்சும் விடேலை. பிறகுதான் பணிப்பாளர் அதை அறிஞ்சு எல்லாரையும் போன் பண்ணி விசாரிச்சு, என்ன நடந்ததெண்டு அறிஞ்சிருக்கிறார். இண்டைக்கு அது சம்பந்தமா இந்தச் சம்பவத்தோட தொடர்புள்ள எல்லாரையும் கூப்பிட்டு 'மீட்டிங்' ஒண்டும் நடத்த இருக்கிறார். ஒரு பணிப்பாளர் கூட மனிதாபிமானம்தான் எல்லாத்தையும் விட பெரிசு எண்டு நினைக்கேக்க, அங்க இருக்கிற சிலர் மட்டும் சில்லறைத்தனமா நடந்து ஆஸ்பத்திரிக்கும், சுகாதாரத் துறைக்கும் கெட்டபேர் வாங்கிக் குடுக்கினம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26
பெரியபுராணத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் சிறப்பிக்கவுள்ளார். (எ-ரி3)



# பைத்தியத்துக்கே மற்றவரும் பைத்தியமாகத் தெரிவார்கள்

## செல்வத்துக்குப் பதிலளிக்கிறார் வீரசேகர

**கொழும்பு, ஜூலை 26**
**நாம் உண்மைகளைச் சொல்லுகின்றபோது பைத்தியக்குணத்துடன் இருக்கும் அவர்களுக்கு எங்களைப் பார்க்கும்போதும் பைத்தியமாகத்தான் தெரியும் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன், சரத் வீரசேகரவை மனநோயாளி என்று குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார். 'உண்மையில் அவர்தான் மனநோயாளி. தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குள் தலைமைப்பொறுப்புக்கு உச்சபட்ச மோதல் நடக்கின்றது. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரதிநிதி என்று கூறுவதற்குக் கூட அவர்களுக்கு அருகதையில்லை. தலைநகர் கொழும்பில் அதிகப்படியான விருப்பு வாக்குடன் நாடாளுமன்றம் வந்த என்னைப் பார்த்து மனநோயாளி என்று கூற அவருக்கு வெட்கமில்லையா?' என்று வீரசேகர கேள்வி எழுப்பினார். (அ-ஓ-22)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:**. பணவரவும் திடீர் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்து விடுவீர்கள். தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** சிலருக்கு எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்** :கையில் தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைக்கும். நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள்வழியில்செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** சொல்லிலும் செயலிலும் நிதானம் தேவைப்படும் நாள். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் . பொறுமை அவசியம்.

**விருச்சிகம்:** நன்மை ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். சில பிரச்சினைகள் ஏற்படும்.சமாளித்துவிடுவீர்கள்.

**தனுசு:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும் நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். பிள்ளைகளின் அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சங்கடங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். குடும்பத்தில் பிள்ளைகளால் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும்.

# வெப்பம் உயர்வு: பரவும் காட்டுத்தீ

பதுளை, ஜூலை 26
தற்போதைய கடுமையான வரட்சி மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் காட்டுத்தீ பதிவாகி வருகிறது.
காட்டுத்தீ தொடர்பான தகவல்களை 117 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
அதேவேளை, மஹியங்கனை, தம்பான, மாவரகல வனப்பகுதியில் தொடர்ந்து காட்டுத்தீ பரவுகிறது. இதுவரையில் 70 ஏக்கருக்கும் அதிகமான வனப்பகுதி தீக்கிரையாகி உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)



# இலங்கையை சைக்கிளில் சுற்றி வந்தவர் கௌரவிப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 26
துவிச்சக்கரவண்டியில் தனது 68 வயதில் இலங்கையைச் சுற்றிவந்த வை.கைலைநாதனைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி சுழிபுரம் மூலக் கிளையின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு வலி. மேற்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் விசாகப்பெருமாள் உமாபதி தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் வை.கைலைநாதனுக்கு மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், காரைநகர் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் பாலச்சந்திரன், கிராமமட்டப் பிரதிநிதிகள், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-27)


# பகிஷ்கரிப்பு நிறைவுற்றும் ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, ஜூலை 26
ரயில் சாரதிகளின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் 4 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முடிவுக்கு வந்தது. ஆயினும் நேற்றுக் காலை 4 சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி2)

# தேசிய மட்ட நீச்சல் போட்டியில் வடக்கில் 30 வீரர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
47ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக நடைபெறும் தேசிய மட்ட நீச்சல் போட்டியில் முதன்முறையாக வடமாகாண அணி பங்கேற்கவுள்ளது.
தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.
இதில் வடக்கு மாகாண அணி சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 20 வீரர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 10 வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.





இந்த வீர, வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி அனுப்பும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சி நகரிலுள்ள நீச்சல் தடாக வளாகத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாக பங்கேற்று வாழ்த்துரைகளை நிகழ்த்தினார். நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், உதவி மாவட்டச் செயலாளர் ஹ.சத்திய ஜீவிதா, விளையாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்கள், பயிற்றுநர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ச-113)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனிதத்தைத் தொலைக்கிறோமா?

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள் 'மனிதாபிமானம் என்றால் கிலோ என்ன விலை?' என்று கேட்பது போல அமைந்திருக்கின்றன. ஒன்று, கல்வியங்காட்டில் வீட்டுவேலைக்கெனப் பணிக்கமர்த்தப்பட்ட 17 வயதுச் சிறுமியின் தற்கொலை. மற்றையது, நெடுந்தீவில் பால் புரைக்கேறியதால் உயிரிழந்த குழந்தையின் சடலத்தோடு வந்த தாயை அம்புலன்ஸுக்குள் இருந்து இறங்கவிடாமல் சில மணித்தியாலங்கள் அடைத்து வைத்தமை. இவ்விரு சம்பவங்களும் யாழ்ப்பாணத்தவர்கள் இது நாள்வரையும் தம்மைப் பற்றி பேசிவந்த பெருமைகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டுள்ளன.

கல்வியங்காட்டில் வீட்டுவேலைக்கெனச் சென்ற 17 வயதான சிறுமி, மன்னர் காலத்தில் இருந்ததை விடவும் மோசமான முறையில் தனிமைச் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார். தன் பெற்றோரை, சகோதரர்களைப் பார்க்கவோ, தன் வீட்டுக்குச் செல்லவோ அவரைப் பணிக்கமர்த்திய பாவிகள் அனுமதிக்கவில்லை. உலகமறியாத அந்தச் சிறுமி, சுமார் நான்கு மாதங்கள் தன் குடும்பத்தைப் பார்க்காமல், உறவாடாமல் இருப்பதென்பது எவ்வளவு பெரிய கொடுமை என்பது அந்த எஜமானர்களுக்குத் தெரியாதா? சரி, பணிச்சுமையால் வீட்டுக்குத்தான் அந்தச் சிறுமியை அனுப்பமுடியாவிட்டாலும் குறைந்தபட்சம் தொலைபேசியிலாவது, தன் குடும்பத்தோடு அந்தப் பெண்ணை உரையாட அனுமதித்திருக்கலாம். அதற்கும் தடை. மாதத்தில் ஒரேயொருநாள் மாத்திரமே அந்தப் பெண் தன் குடும்பத்தாரோடு தொலைபேசியில் பேசலாம். அதுவும் மிகச் சில நிமிடங்கள் மட்டுமே. இப்படி அந்தச் சிறுமியின் உலகை ஒரு வீட்டுக்குள் சுருக்கி, அந்த நான்கு சுவர்களுக்குள் அவளது உணர்வுகளை நசுக்கியவர்கள், சம்பளத்தையாவது சீராகக் கொடுத்தார்களாவென்றால், அதுவுமில்லை. நிர்ணயிக்கப்பட்ட வேதனத்தில் ஐந்தில் ஒரு பங்கையே மாதந்தோறும் அந்தச் சிறுமியின் வீட்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மிகுதித்தொகையை பிணைப்பணம் போல பிடித்து வைத்து, வேலை வாங்கியிருக்கிறார்கள். குடும்பத்தைப் பிரிந்த ஏக்கம், தனிமைச் சிறை, தொடர்பாடல் கட்டுப்பாடு, வெளியுலகத் தொடர்பு துண்டிப்பு, தொடர்ச்சியான வேலைப் பளு, ஒழுங்கற்ற சம்பளம் என்பனவெல்லாம் சேர்ந்து கடைசியில் அந்தச் சிறுமியின் உயிரையே குடித்துவிட்டன. குறைந்தபட்சம் அந்த வீட்டில் உள்ளோர் அந்தப் பெண் மீது கொஞ்சமேனும் கருணையைக் கசிய விட்டிருந்தால் கூட, அவளது உயிர் பறிபோயிருக்காது. மனச்சாட்சி, மனிதாபிமானம் என்வற்றை அடகுவைத்தவர்கள் போல, இரும்புத்தனத்தோடு அந்த வீட்டு எஜமானர்கள் நடந்துகொண்டமையே அவளின் சாவுக்குக் காரணம் என்பது எல்லோருக்குமே தெரியும்.


அதைப்போன்ற இன்னொரு சம்பவம் தான், 9 மாதச் சிசுவின் சடலத்தோடு வந்த தாயை அம்புலன்ஸுக்குள் தடுத்து வைத்திருந்தமை. பாலூட்டிச் சீராட்டி வளர்த்த குழந்தையின் இழப்பைத் தாங்கமுடியாமல், இதயமே உடைந்துபோய் வந்த தாயை இப்படி இல்லாத பொல்லாத சட்டங்கள், சம்பிரதாயங்களைச் சொல்லி இன்னும் நோகடிப்பதென்பது தர்மத்துக்கு ஒவ்வாத செயலே. மருத்துவமனைகளை பெரும்பாலான மக்கள் ஆலயங்களுக்கு நிகராகவே பார்க்கின்றனர். அப்படிப்பட்ட மருத்துவமனை வாசலில் வைத்து, சேயிழந்த துயரேந்திச் சென்ற தாயை அம்புலன்ஸுக்குள் சடலத்தோடு அடைத்துவைப்பதென்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்? ஒரு சாவு நிகழ்ந்தால், ஓடிப்போய், உறுதுணையாக இருந்து ஆறுதல் சொல்லி, அவர்களை இழப்பின் வலியில் இருந்து மீட்டெடுப்பதே எமது மரபு. ஆனால் அதை இப்போது தொலைத்துவிட்டோம். எல்லோருமே இயந்திரங்களாக மாறி இதயங்களை இழந்துவிட்டோம். சட்டங்களைச் சொல்லி ஒரு சடலத்தை இறக்க மருத்துவமனை மறுப்பது போல, விபத்தொன்றில் குற்றுயிராக இருப்பவர்களை சட்டத்தின் பெயரைச் சொல்லி எவரும் தூக்கியெடுத்து மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லாமல் விட்டால் நிலைமை என்னாகும்? விபத்துச்சாவுகளின் எண்ணிக்கை பல்மடங்காகியிருக்குமே. வீதியில் பயணிக்கும் ஒரு பொதுமகன் கூட முன்பின் தெரியாத ஒருவர் அடிபட்டு வீதியில் கிடந்தால் அவரைக் காப்பாற்றத்தான் துடிப்பார். அப்படி சாதாரண வழிப்போக்கர்களுக்குக் கூட சுரக்கும் மனிதாபிமானம், மருத்துவமனையில் பணிபுரிவோருக்கு வற்றிவிட்டதா? நித்தமும் சாவுகளையும், ரணங்களையும் பார்த்து அவர்களின் மனங்களும் இறுகிப்போய்விட்டதா?

ஓர் இனத்தின் ஆன்மாவென்பது அதன் உணர்வுகள், மரபுகள், மனிதநேயம், மற்றவர்களுக்காக இரங்குதல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. ஆனால் எமது இனம் இவற்றையெல்லாம் இழந்துபோய், வெறும் ஜடங்களாக, நடைப்பிணங்களாக மாறிவருகிறது என்பதற்கான அபாயக் குறிகாட்டிகளே இவ்விரு சம்பவங்களும். இந்த நிலை நீடித்தால், ஒருவரையொருவர் கொன்று தின்னும் ஆதிகால நிலைக்கு நாம் திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### நாளொரு நல்வார்த்தை

நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- மாவீரன் அலெக்சாண்டர்




# எல்லைதாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் கைது

**யாழ்ப்பாணம், ஜூலை 26**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நெடுந்தீவு அருகே நேற்றுமுன்தினம் இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்ட போது அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 2 படகுகளைக் கைப்பற்றியதுடன், அதிலிருந்த 9 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்குப் பின்னர் அவர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களை ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். வடக்கு மாகாணத்தின் கடற்பரப்புக்களில் இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த திங்கட்கிழமையும் வெற்றிலைக்கேணி மற்றும் கட்டைக்காடு பகுதிகளில் 16 இந்திய மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடிக்காகக் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-எ-26,100)

## வெளிமுகப் பண அனுப்பல்கள் புதிய கட்டளைகள் நடைமுறை

கொழும்பு, ஜூலை 26

வெளிநாட்டுச் செலாவணி வெளிமுகப் பண அனுப்பல்கள் மீது விதிக்கப்பட்ட சில வரையறைகள் தளர்த்தப்பட்டு, புதிய கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டும், சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களை மேலும் வசதிப்படுத்தும் நோக்குடனும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் பரிந்துரையுடனும் அமைச்சரவையின் ஒப்புதலுடனும் நிதி அமைச்சரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர் ஒருவர் முதல் தடவையாக பணம் அனுப்புவதற்கான உயர்ந்தபட்ச வரையறை, 30 ஆயிரம் அமெரிக்க டொலராக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தற்போதைய புதிய தீர்மானத்தின் பிரகாரம் அந்தத் தொகை 50 ஆயிரம் அமெரிக்க டொலராக வரையறை செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

## மருந்து ஒவ்வாமை; விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 26

மருந்து ஒவ்வாமை மரணங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கூட்டமைப்பின் தலைவர் ஜி.ஜி.சமல் சஞ்சீவ தெற்கு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை** 27.07.2023 வியாழக்கிழமை ஆடி 11

சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரணிலுக்கு வாக்குறுதிகள் வழங்கவில்லை பெரமுன!

## ரஞ்சித் பண்டார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவோம் என்று எவரும் வாக்குறுதி வழங்கவில்லை. ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவோம் என பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குறிப்பிடுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

ஆனமடுவ பகுதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கட்சித் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடைக்கால அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளதால் எமது கட்சியின் கொள்கையை விட்டுக்கொடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரே ரணில் விக்கிரமசிங்க என்று ஒரு தரப்பினர் அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாட்டைக் குறிப்பிட்டுக்கொள்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதாக எவரும் வாக்குறுதி வழங்கவில்லை. ஒப்பந்தம் ஏதும் கைச்சாத்திடவில்லை.

கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்கள் மாத்திரமே தற்போது கட்சியில் உள்ளார்கள். தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேற்றமடைவது குறித்து அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (எ-இ)


THE ROYAL COLLEGE OF JAFFNA
பிரான்பற்று வீதி, சங்கானை
O/L மாணவர்களுக்கு சிறு குழுக்களாக விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்குசிறந்த ஆசிரியர் உடன் தேவை.
077 675 1649



உ
சிவமயம்

நன்றி நவிலலும் ஆத்ம சாந்தி வழிபாடும்



ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
(27.05.1925 - 15.07.2023)

இடம் : நகுலேஸ்வரம் காலம்: 29.07.2023 சனிக்கிழமை

கடந்த 15.07.2023 சனிப் பிரதோஷத்தன்று சிவசாயுஜ்ஜம் அடைந்த கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா **ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களின்** மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி முகநூல் மின்னஞ்சல் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரது இறுதி யாத்திரையில் பங்கு கொண்ட அனைவருக்கும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்து கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வருகின்ற 29.07.2023 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் வழிபாடு பூரணத்துவமடைய தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தயவன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி


**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

நகுலேஸ்வரம்
0776366338 / 0212244436

இங்ஙனம்
குடும்பத்தினர்



அந்தியேட்டி அழைப்பு



கடந்த (28.06.2023) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த
அமரர் **சுப்பிரமணியம் தர்மரத்தினம்**
**(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)**
அவர்களின் அந்தியேட்டி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 28.07.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம். இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தர வேண்டுமென்று அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**புளியம்பொக்கணை.** **குடும்பத்தினர்**


# கோத்தா - வஜிர இரகசிய சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தனவும் விமான நிலையத்தில் இரகசியக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

கோத்தாபய ராஜபக்ச கம்போடியாவுக்கான இரண்டு வாரப் பயணத்தை முடித்துவிட்டு கடந்த வாரம் சிங்கப்பூர் எயார் லைன்ஸ் விமானத்தின் ஊடாக இலங்கை திரும்பினார். அதே விமானத்தில் வஜிர அபேவர்த்தனவும் வந்திருந்தார். அவர் சிகிச்சை ஒன்றுக்காகச் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தார். அவர்கள் இருவரும் விமானத்தில் ஒன்றாகவே இலங்கை வந்தனர்.

அவர்கள் இருவரும் விமானத்தில் ஏறுவதற்கு முன்பும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கிய பின்பும் இரகசியக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது. (எ-22)


**பெயர்மாற்றம்**

அனிச்சன் குளம் மல்லாவி 2ம் பகுதி துணுக்காயில் வசிக்கும் **வேலுப்பிள்ளை தம்பிராஜ்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **வேலுப்பிள்ளை ஆனந்தகுமார்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **வேலுப்பிள்ளை ஆனந்தகுமார்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/51406)AH-1 - **வேலுப்பிள்ளை ஆனந்தகுமார்** -



**பெயர்மாற்றம்**

மெமோறியல் வீதி, மானிப்பாயில் வசிக்கும் **ரமேஸ் புனேஸ்வரி** ஆகிய நான் எனது பெயரை **ரமேஸ் புவனேஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ரமேஸ் புவனேஸ்வரி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS/25631)AH-1 - ரமேஸ் புவனேஸ்வரி -



**மு/ வித்தியானந்த கல்லூரி**
( தேசிய பாடசாலை )

**பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2023**

மேற்படி பொதுக்கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.
**காலம்: 06.08.2023 ( ஞாயிற்றுக் கிழமை )**
**நேரம்: மு.ப. 9.00**
**இடம்: பாடசாலை கேட்போர் கூடம்.**
**நிகழ்ச்சி நிரல்:**

1. அக வணக்கம்
2. தலைமையுரை: திரு.ச. பாலச்சந்திரன் ( அதிபர் )
3. செயலாளர் வருடாந்த கூட்டறிக்கையும் கடந்த கால செயற்றிட்ட விபரணம்.
4. பொருளாளர் கணக்கறிக்கை
5. புதிய நிர்வாக சபை தெரிவு.
6. பாடசாலை புனர்நிர்மாணம் பற்றிய கலந்துரையாடல்.
7. ஏனைய விடயங்கள்.
8. நன்றியுரை.

**குறிப்பு:**
1. கணக்கறிக்கை பாடசாலை விளம்பரப்பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.
2. புதிய அங்கத்தவர்கள் 06.08.2023 காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை பாடசாலையில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**மு/ வித்தியானந்த கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்,**
**முல்லைத்தீவு.**

(CS 25635) A-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# '13' வேண்டுமா? மக்களே தீர்மானிக்கட்டும்

## ஓமல்பே தேரர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 25**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மக்கள் வாக்கெடுப்பு நடத்துவது முரண்பாடற்ற நிலையான தீர்வை பெற்றுக் கொடுக்கும். மக்களாணை இல்லாத தரப்பினர் எடுக்கும் தீர்மானம் நாட்டில் முரண்பாடுகளை மாத்திரமே தோற்றுவிக்கும் என்று மக்கள் பேரவையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

அரசியல் களத்தில் தற்போதைய பிரதான பேசுபொருளான அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியதை தொடர்ந்து இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக கோத்தாபயவின் சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

'13' ஐ நடைமுறைப்படுத்தினால் தென்னிலங்கையில் வீண் முரண்பாடுகள் தோற்றம் பெறும். நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு பாதிக்கப்படும். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இல்லாத பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும். 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்களே தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்துவது அத்தியாவசியமானது. - என்றார். (ச-இ)



# குழந்தையின் சடலத்தோடு தாய் காத்திருந்தது அநீதியே

## அங்கஜன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

குழந்தையின் உடலத்தோடு நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்த அந்தத் தாயை அம்புலன்ஸில் காக்க வைத்தமை கண்டிக்கத்தக்கது என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கவலை தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

குழந்தையின் உடலத்தோடு நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்த தாயின் வேதனை சொல்லிமாள முடியாதது. அதனை நான் உணர்கிறேன். இதற்குக் காரணமானவர்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன்

அம்புலன்ஸ் நடைமுறைகளில் இத்தனை இறுக்கம் கடைப்பிடிக்கப்படுவது சரியா தவறா என்பதைத் தாண்டி மனிதாபிமானத்தோடு செயற்பட்டிருத்தல் வேண்டும்.

தீவுகளுக்கிடையிலான மருத்துவ சேவையை வினைத்திறனாக வழங்கும் வகையில் மருத்துவமனை வளங்கள், ஆளணிகள், படகுச் சேவைகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

தீவகத்துக்கு இலவச அமரர் ஊர்தி சேவை ஒன்று இயங்குமாயின், அதன் ஊடாகப் பலர் பயன்பெறுவார்கள்.

தன்னார்வ அறக்கட்டளைகள், நன்கொடையாளர்களும் இணைந்து இந்த விடயத்தில் அக்கறை கொள்ளவேண்டும்- என்றுள்ளது. (ச-27)

# மறக்கப்படும் ராஜபக்சக்கள்

கொழும்பு, ஜூலை 26

ராஜபக்ச வித்தியாலயம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் ராஜபக்சக்கள் எவரும் அழைக்கப்படவில்லை என்று செய்தி வெளியாகியுள்ளது.

மாத்தறை மஹிந்த ராஜபக்ச வித்தியாலயத்தில் கடந்த வாரம் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. ஆனால், ராஜபக்ச சகோதரர்கள் யாரும் அந்த நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலையின் தற்போதைய அதிபராக இருப்பவர் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர் என்று கூறப்படுகின்றது. (எ-22)

# தேர்தலே நிச்சயமில்லை இதில் வேட்பாளர் கனவு!

## ஹரினுக்குப் பொன்சேகா பதிலடி



கொழும்பு, ஜூலை 26

தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எவையும் வெளிவராத நிலையில் வேட்பாளராகக் கனவு காண்பது பிரயோசனமற்றது. மக்களின் விருப்பத்துக்கும் கோரிக்கைக்கும் அமையவே அனைத்தும் இடம்பெறும்.

-இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிடமாட்டார் என்ற அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா பதிலடி வழங்கியுள்ளார். ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சரியான தீர்மானங்கள் எடுக்கப்படும் பக்கத்திலேயே நாம் செயற்படுவோம். ஒரு சிலர் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளும் தீர்ந்து விட்டதைப் போன்று சித்திரிக்கின்றனர். தற்போது எமது தேவை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைப்பதல்ல. மக்களுக்கு 3 வேளையும் உணவு உண்ணக் கூடிய சூழலே தேவை - என்றார். (ச-இ)

# நாட்டுக்குப் பலம் சேர்க்கும் புதிய யாப்பு உருவாகிறது

## ஐ.தே.கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 26

நாட்டுக்குப் பலம் சேர்க்கும் வகையில் அனைத்துக் கட்சிகளையும் முடியுமானவரை ஒன்றிணைக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று அந்தக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி கலவான தொகுதி அரசியல்சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அனைத்துக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் வருவதற்கு முடியுமான வகையில் கட்சியின் புதிய யாப்பு நிர்மாணிக்கப்படும். புதிய உலகுக்குப் பொருத்தமான வகையிலும் நாட்டுக்குப் பலம் சேர்க்கும் வகையிலும் கட்சியின் யாப்பு அமையப்பெறும். - என்றார். (ச-இ)



# குடும்பத் தலைவர் வெட்டிக்கொலை!

கொழும்பு, ஜூலை 26

பலாங்கொட, புலத்கம பிரதேசத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபரை வாளால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவரைக் கைதுசெய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2-22)

# தண்டனை பெற்ற பிக்கு மீளவும் துர்நடத்தையில்!

## சிறுவர் நலன்பேண் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 26

லண்டனில் 10 வயதுச் சிறுமியை 4 தடவைகள் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் தண்டனை பெற்ற பிக்கு ஒருவர் இலங்கையிலும் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகிறாரென பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிறப்புரிமைகளை விடுத்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு சிறுவர் நலன்பேணும் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:

கம்பஹாவிலுள்ள விகாரையின் பிரதம பிக்குவான் பஹலகம சோமரத்ன தேரர், 1970ஆம் ஆண்டு லண்டனிலுள்ள தேம்ஸ் விகாரையின் விகாராதிபதியாக இருந்த காலத்தில் இவர் மீது சிறுவர் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. 1980 களில் குரோய்டனிலுள்ள விகாரையில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக இரண்டாவது குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்காக அவருக்கு 2012 இல் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது நீதிமன்று. இந்தத் தண்டனை ஏனையோருக்கும் பாடமாக அமைய வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு குற்றச்சாட்டுகளையும் மறுத்த தேரர் 2013 ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்தார். அதற்கு இவரது தண்டனைக் காலத்தை 6 வருடங்களாகக் குறைத்து சிறுவர்களுடன் பழகத் தடை விதிக்கப்பட்டது.

தற்போது சோமரத்ன தேரர், வித்யாரவிந்த பிரிவேணாவின் தலைமைப் பிக்குவாக இருக்கிறார்.

சோமரத்ன தேரரைப்பற்றி தொடர்ந்து பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. சோமரத்ன தேரரை இளம் பிக்குகளுக்குப் போதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது. மத சிறப்புரிமைகளை விடுத்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரூடோவின் அறிக்கை அரசியல் ஆதாயமாம்!

## வெளிவிவகார அமைச்சு கண்டுபிடிப்பு

கனேடியப் பிரதமர் ட்ரூடோ, ஜூலை 23ஆம் திகதியன்று வெளியிட்ட அறிக்கையில் 'தமிழர் இனப்படுகொலை நினைவுதினம்' என்று பயன்படுத்திய குறிப்பு, கனேடியத் தேர்தலை இலக்காகக் கொண்ட நடவடிக்கை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது. இதுதொடர்பில் வெளிவிவகாரத்துறை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:- இலங்கையில் கடந்த கால மோதல்கள் தொடர்பான தவறான, திரிபுபடுத்தப்பட்ட கதையை கனடா தொடர்ந்து குறிப்பிடுவது, உள்ளூர் வாக்கு வங்கி தேர்தல் ஆதாயங்களை மட்டுமே இலக்காகக் கொண்டது. இது பரந்த இன நல்லிணக்க இலக்குகளுக்கு உகந்தது அல்ல. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்துசமூகங்களுக்கிடையில் உறுதித்தன்மை, முன்னேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கனடாவையும் அதன் தலைவர்களையும் இலங்கை வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (ம)


unicef for every child

நீங்கள், கிராமத்தின், நாட்டின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்விற்காக ஆர்வத்துடனும் துடிப்புடனும் உழைக்க விரும்பும் இளைஞரா அல்லது யுவதியா?

உங்கள் கிராமத்தின், நகரத்தின் எதிர்கால உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டிற்காக #YouPAH மற்றும் #UNICEF உடன் கைகோர்த்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற விரும்புகிறீர்களா?

அவ்வாறாயின்,

#FOODVENTURE youth CHALLENGE உங்களுக்கானது

இதில் உங்கள் கிராமத்தின், நகரத்தின் அதே போன்று ஒரு நிறுவனத்தின் இளைஞர் கழகமாகவோ அல்லது இரண்டு பேர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு குழுக்களாகவோ பங்கேற்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெறவும் விண்ணப்பிக்கவும் கீழுள்ள இணைப்பைப் பார்வையிடவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2023 ஜூலை 31 ஆகும்

youpahsl@gmail.com YOUPAH.ORG 0777 035 268

Young Professionals' Alliance for Health


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 30.09.2011 | இறைவனடியில் 26.07.2020

**அமரர் பிரதீபன் தஸ்விகன்**

சுவாசத்திலும் நீதெரிந்தாய் - எம்
மனங்களெல்லாம் நீ நிறைந்தாய் என
மண்ணுள் நாம் புதையும்வரை
உன் நினைவு மனம்விட்டுப் போவதில்லை.
மண்ணுள்ளே புதைந்தாலென்ன
விண்ணோடறக் கலந்தாலென்ன
மதிபோன்ற உன் சிரிப்பு நிதம்
மனங்குத்திக் கிழிக்குதையா.
மூன்று ஆண்டுகளோ முக்கோடி வினாடிகளோ
முழுமனதும் கதறி உந்தன் நினைவுகளுள்
மூழ்கிநிதம் இறைவனடி நீசேரவென்றே
இரைஞ்சியவன் அடிபணிந்தோம்

**"சரஸ்வதி வாசம்"** அளவெட்டி மத்தி, அளவெட்டி. **குடும்பத்தினர்.**

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 01 . 02 . 1955



ஆண்டவன் அடியில் 21 . 07 . 2023

### திருமதி பிறேமச்சந்திரன் லங்காதேவி

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறேமச்சந்திரன் லங்காதேவி அவர்கள் கடந்த (21.07.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், பிறேமச்சந்திரன் அவர்களின் காதல் மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், வசந்தலா (கனடா), சந்திரகலா, பிரபாகர், வற்சலா (ஜேர்மனி), பிரஜாந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரன் (கனடா), ரவீந்திரகுமார், கேமமாலினி, கலைச்செல்வன் (ஜேர்மனி), கனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அருஸ், கமிதா, அபிரா (கனடா), சதுஜா, திவ்யா, பவின், பிரதீனா (ஜேர்மனி), பிரதீஷா (ஜேர்மனி), மேகஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அன்னலட்சுமி (ஜேர்மனி), விஜயலட்சுமி, தனலட்சுமி (கனடா), சத்தியமூர்த்தி (கனடா), ஜெயலட்சுமி, கிருஸ்ணமூர்த்தி, தெட்சணாமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2023) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

077 320 7834, 076 245 6244

## மரண அறிவித்தல்

### மோசஸ் வின்சஸ்லோஸ் மதுரநாயகம்

தோற்றம்: 16.04.1942 | மறைவு: 25.07.2023



மல்லாகத்தை பிறப்பிடமாகவும், செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மோசஸ் வின்சஸ்லோஸ் மதுரநாயகம் நேற்று (25.07.2023) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. மோசஸ் திருமதி அடைக்கலம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் மற்றும் ஹெப்சிபா பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, பத்திநாதர், மேரி மாகிறட், அருளானந்தம், பெனடிக்ற் ஆசீர்வாதம், றீற்றா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மோசஸ் பத்மலால், மெறிற்றா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜயானந்தி, விமல்ராஜ் ஆகியோரின் மாமனாரும், தர்ணிகா, விதுர்ஷிகன், சடோனி, ஷெஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.07.2023) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு செம்மணி வீதி, நல்லூரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஹெலன் தோட்டம், மணியந்தோட்டம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, வெயிலுகந்த பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
செம்மணி வீதி, நல்லூர்.
0779068285.

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

"ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை." -வள்ளுவர்


'விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' என்கின்றார் பொய்யாமொழிப் புலவராம் வள்ளுவர். அதாவது கல்விதான் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான வேறுபாடு என்பது இதன் பொருள். சுயகற்றல் மற்றும் கற்பித்தல் மூலமாக ஒரு மானிட ஜீவனால் உள்வாங்கப்படும் கல்வியானது, மொழிக் கல்வியினை தோற்றுவாயாகக் கொண்டு பரந்துவிரிந்த உலகில் பயணப்படுகின்றது.

## வணிகமாகும் கல்வியால்

# அழிவின் விளிம்பில் கிராமப் பாடசாலை

■ மா.பஞ்சலோகரஞ்சன்
(ஆனையூர்க் கவிராயர்)

### மனித தேவைப்பாடுகளில் கல்வியின் முக்கியத்துவம்

பண்டைய காலங்களில் மொழியியல் மற்றும் பேரியல் துறைகளுக்குள் மட்டும் சிறைப்பட்டிருந்த கல்வித்துறை. இன்றைய நவீன உலகில் சர்வ உலக வியாபகத்தன்மை மிக்கதாகவும் விண்ணையும் மண்ணையும் கட்டி ஆளும் பன்மைத்துவம் மிக்கதாகவும் பெருவளர்ச்சி கண்டுள்ளமை கண்கூடு. பணம் படைத்து பட்டோப வாழ்வு வாழ்வோரைக் காட்டிலும் நல்ல மனம் படைத்த கல்வியியலாளருக்கு சமூக அளவில் ஆன்றோர் அவையில் கிடைக்கும் சிறப்பு மிகவும் மேலானதும் பெறுமதியானதும் கூட. ஆனால் இன்று கல்வி கல்வியுலகின் விற்பனைப் பண்டமாக மாற்றப்படும் அவலநிலை கல்வியின் முதன்மைத்துவத்தையும் மேன்மைத்துவத்தையும் நகைப்புக்கு இடமாக்கியுள்ள கடைநிலைச் செயலாகும்.

இன்றைய பெற்றோரின் மன நிலையானது பண்டைய குருசீட வரன்முறைகளில் காலத்துக்கேற்ற இன்றியமையாத நல்லம்சங்களைக்கூட புறந்தள்ளி ஒரு பாடத்தினை, எத்தனை ஆசிரியரிடமாவது பிள்ளைகளைக் கொண்டு சேர்த்து கற்பித்து பரீட்சைகளில் உயர் பெறுபேற்றினை பெறவைப்பதை மட்டும் நோக்காகக் கொண்டுள்ளது. மாறாக அவர்கள் ஆசிரிய பெற்றோர் உறவு மேம்பாடு தொடர்பில் அக்கறை கொள்வதில்லை. ஆசிரிய மாணவர் உறவில் நேரிய சீரிய மதிப்பார்ந்த நல்லுறவை வலுப்பெற வைப்பதில் பெற்றோர் கருத்தூன்றிச் செயற்பட வேண்டும். பிள்ளைகளுக்கு வீடுகளில் அமையக்கூடிய கல்விச் சூழலே பாடசாலைகளில் கல்வியை முழுமனதுடன் உள்வாங்கும் திறனை உறுதிசெய்யும். இதனை பெற்றோர் புரிந்து கொண்டு பிள்ளைகளை அக்கறையுடன் அவதானித்து பிள்ளைகளின் கற்கும் மனோதிறத்தினை மேம்படுத்த வேண்டும். 'பெற்றோர் முதலாவது ஆசிரியர்: ஆசிரியர் இரண்டாவது பெற்றோர்' என்னும் மேலைத்தேய பழமொழிக்கிணங்க, பெற்றோரும் ஆசிரியரும் இரு தண்டவாளங்களைப் போன்று ஒருமித்த செயலார்வத்தினை பிள்ளைகளிடத்தில் காண்பிக்கும் போது பிள்ளைகள் கல்வியில் பிரகாசிப்பது இலகுவானதாகி விடும்.

### மூடப்பட்டுக்கொண்டிருக்கும் கிராமத்துப் பாடசாலைகள்

எம் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் மிகுந்த இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அண்மைக்கால அரச அறிவிப்புகள் மூலம் அறிய முடிகின்றது. இதற்கும் பாடசாலைகள் மூடப்படுகின்ற அபாய நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதோ என ஐயப்பட வேண்டியுள்ளது. அத்துடன் அண்மைக் காலத்தில் பாடசாலை இடைவிலகலும் பெரும் இடர்ப்பாடாக உருவெடுத்துள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக போதைப் பொருள் பாவனை மாணவ சமூகத்தில் பெரிதும் ஊடுருவியுள்ளதும் மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

ஒரு மாணவனின் வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையே உள்ள தூர இடைவெளி அம்மாணவனை பெற்றோர் கண்காணிக்கும் ஏது நிலையை இல்லாமலாக்கும் அபாய நிலை காணப்படுகிறது. அருகில் உள்ள பாடசாலையில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியையாவது கற்கும் பட்சத்தில் அது சாத்தியப்பாடுள்ளதாகலாம். பிள்ளையின் கல்வி தொடர்பான அங்கலாய்ப்பும் பிரபல பாடசாலையில் தமது பிள்ளைக்கு இடம் கிடைக்காவிடின் அவனது கல்வி பாதிக்கப்பட்டுவிடுமோ? என்ற பெற்றோரின் பதற்றமும் மாறவேண்டும். அந்தக் காலத்தில் கிராமங்கள் தோறும் பாடசாலைகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் பிள்ளைகள் இலகுவாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவேயாகும். இன்று கல்வியின் அதீத கற்பனையும் நவீன போக்குவரத்து வசதிகளும் இந்த நிலையை மாற்றி பிள்ளைகளை கல்விக்கு மேலதிகமாக வேறு சுமைகளையும் சுமக்க நிர்ப்பந்திக்கிறது. எமது குடியிருப்புகளுக்கு நடுவிலே அறிவுக் களஞ்சியங்களாகத் திகழும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்து கிராமியச்சூழலில் எமது பிள்ளைகள் கல்விக்கனியை சுவைக்க வகை செய்து ஒரு உயர்தரக் கல்வி நிறுவனத்தை இயங்கவைக்கத் தவறுவது விழிப்புணர்வற்ற செயலாகும்.

கல்வித்துறை, மருத்துவத்துறை, ஆன்மிகத்துறை ஆகிய அனைத்துத் துறைகளும் இயலுமானவரை கிராமங்களில் வலுப்பெற கிராமத்துமக்கள் பேரெழுச்சியுடன் உழைக்கவேண்டும். ஒரு கிராம மேம்பாட்டிற்கு பொறுப்புடன் உழைப்பது அந்தக்கிராமம் சார் சமூகங்களின் அத்தியாவசியப் பணியாகும். அநேகமாக எமது நாட்டில் குறைந்தது ஒரு கிராமத்துக்கு ஒரு பாடசாலையாவது இல்லாமல் இல்லை. இது கிராமமக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். இதனை உணர்ந்து கிராமமக்கள் ஏனைய பொது அமைப்புகள், நிறுவனங்கள் மேம்படுத்துவதில் காட்டும் அக்கறையினை பாடசாலைகள் விடயத்திலும் காண்பிக்க அணி திரள வேண்டும். இதற்கு கல்வி தொடர்பான ஆழ் புரிதலும் அவசியமானதாகும்.

இந்த விடயம் தொடர்பில் அற்ப மன ஆசைகளுக்குட்படாது எமது எதிர்கால சந்ததிக்கு இலவசக்கல்வி இலகுவாகக் கிடைக்கக்கூடிய வகையில் இல்லங்களுக்கு அருகில் இயன்றவரை கல்வியின் ஊற்றுக்கண் திறக்கக் கூடிய வகையில் முழுச்சமூகமும் அறிவுக்கண் திறந்து உழைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.

அனுப்ப வேண்டிய முகவரி: புதன்பொய்கை உதயன், 361.கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மின்னஞ்சல் முகவரி: puthanpoigai@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கலுடன் கைகோர்த்த கலாசார மாற்றம்



கணேஸ்குமார் மதியந்தி
ஊடகக் கற்கைகள் துறை
இரண்டாம் வருடம்

நாம் வாழும் இந்தப் பரந்துபட்ட உலகத்தையே தனது கைக்குள் அடக்கியுள்ள உலகமயமாக்கல் என்ற சொல்லானது, தனது பரிணாமத்தின் ஊடாகக் கடந்த இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் எழுந்துள்ளதோடு கால ஓட்டத்துக்கு ஏற்ப தன்னை மாற்றி வளர்ந்துக் கொண்டு செல்கின்றது எனலாம்.

எனவே உலகமயமாக்கல் என்பது புதிய விடயம் அல்ல. உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயற்பாடு. கலாசாரங்கள் ஒன்றுக்கொன்று ஒட்டி இருக்கும் ஓர் அடிப்படை வழிமுறையே கலாசார உலகமயமாக்கல் என சமூகவியலாளர்களால் குறிப்பிடப்படுகின்றது. சமுதாய உறவுகளை நீட்டவும், தீவிரப் படுத்தவும், உலகியல் எண்ணங்கள், அழுத்தங்கள் மற்றும் மதிப்புக்களின் பரிமாற்றத்தை குறிப்பதாகவும் கலாசார உலகமயமாக்கல் விளங்குகின்றது. மனித வாழ்க்கையின் இயக்கத்துக்கு கலாசாரம் முக்கியமான இயங்கு சக்தியாக இருக்கும் நிலையில் உலகமயமாக்கல் சூழலில் அது ஏற்படுத்தும் தாக்கத்தினை அவதானிக்க வேண்டி இருக்கின்றது.



## பொழுதுபோக்கு

பொழுதுபோக்கு என்பது இன்று ஓர் உலகமயக் கலாசாரமாக ஆகிவிட்டது. நேரடி விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் சில மிகப்பெரிய பார்வையாளர்கள் கூட்டங்களை கவர்ந்தபடியே இருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சித் தயாரிப்பில் இன்று ஹொலிவுட்டிடம் மட்டும் ஏகபோக உரிமை இல்லை. இந்தியாவின் மும்பை நகரம் சினிமா கலாசாரத்தின் சுவர்க்கபுரியாக மாறிவிட்டது.

## மொழி

கருத்துகள், மனநிலைகள், உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் யோசனைகளை வெளிப்படுத்தும் திறன் கொண்ட ஒரு தொடர்பு ஊடகமாக மொழி விளங்குகின்றது. இன்று உலகில் 7 ஆயிரத்து 139 மொழிகள் பேசப்படுவதாகக் கூறப்படுகின்றது. முதன்மொழி பேச்சாளர்களை மட்டுமே என்னும் போது மண்டலின் என்ற சீன மொழி உலகின் மிகப்பழமையான மொழியாக கருதப்படுகின்றது. இரண்டாம் மூன்றாம் மற்றும் உயர்மொழி பேசுபவர்களில் ஆங்கிலம் உலகின் மிகப்பெரிய மொழியாகும். இதற்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் காலணித்துவ செல்வாக்குக் காரணமாகும். அதிக நாடுகளில் ஆங்கில மொழி சொந்தமற்ற மொழியாகப் பேசப்படுகின்றது. உலகில் 146க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆங்கிலமொழி பேசப்படுகின்றது. அதிக மக்களால் பேசப்படும் ஆங்கிலமொழியை ஆயிரத்து 348 மில்லியன் மக்களும், இரண்டாவதாக ஆயிரத்து 120 மில்லியன் மக்கள் சீன மண்டலின் மொழியையும், மூன்றாவதாக 600 மில்லியன் மக்கள் ஹிந்தி மொழியையும் பேசுகின்றனர். உலக மயமாக்கத்தின் விளைவாக இப்போது உலகில் 50 சதவீதமான மொழிகள் அழிவடையும் ஆபத்தில் உள்ளன. ஒரு மொழி தொலைந்து போகும்போது இதன் விளைவாக அடையாள இழப்பு ஏற்படலாம். இது ஒரு சமூகத்தின் ஆரோக்கியத்தையும் உயிர் சக்தியையும் பாதிக்கின்றது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முன்னணி மொழியாகவும் கணினிகள் மற்றும் கல்வியின் முக்கியமான ஊடகமாகவும் ஆங்கிலமொழி உலகமயமாக்கத்தால் பிரகாசிக்கப்படுகின்றது. உலகமயமாக்கலால் ஆங்கிலமொழி உலகளாவிய சக்தியாக உருவெடுத்துள்ளது. வணிக கலாசார அரசியல் மற்றும் மொழியியல் பரிமாற்றத்தில் ஆங்கிலமொழி அதிக அளவு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் உலகமயமாக்கலால் கலாசாரம் என்பது பல்வேறு கூறுகளின் ஊடாக வளர்ச்சி அடைவதோடு அந்த வளர்ச்சி என்பது ஏற்கனவே காணப்பட்ட கலாசார முறைகளில் மாற்றத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்பது உண்மை.

## உணவு

'கலாசாரத்தின் மிகப் பழமையான பூகோள காவி உணவாகும்'. உணவானது எப்போதும் குறிப்பாக ஐரோப்பிய வர்க்கத்தினதும் காலணித்துவ விரிவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களின் போதும் உலகமயமாக்கத்துக்கான இயங்குசக்தியாக இருந்து வந்துள்ளது. செம்மிளகானது 1493ஆம் ஆண்டு ஸ்பானிய அரசசபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மிக விரைவிலேயே காலணித்துவ உலகம் முழுவதும் பரவி ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சமையல் மற்றும் விவசாய முறைகளை மாற்றி அமைக்கப்பட்டது. ஆபிரிக்க வாழைப்பழங்களும், சிலி நாட்டு திராட்சைகள் மற்றும் கலிபோர்னிய தோடம்பழங்கள் ஆகியவை உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களிடையே பல்வேறுபட்ட உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமைக்க உதவியுள்ளது. தற்போது மத்திய ஆபிரிக்காவில் பச்சை பட்டாணி பயிரிடப்பட்டு அவை ஐரோப்பாவால் நுகரப்படுகின்றன.

## பிரயாணம் மற்றும் உடை

1960களின் பின்னர் விமானக் கட்டணங்கள் குறைவடைந்ததையடுத்து, சராசரியான நபரொருவர் விமானத்தின் மூலம் உலகின் எந்தவொரு பகுதிக்கும் செல்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் மேற்குலகம் கொண்டிருந்த ஆடைக் கலாசாரமும் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியது. இன்று ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட மேற்கத்தேய ஆடைகளை அணிகின்றார்கள். எனினும் தட்பவெப்பநிலையைக் கருத்திற்கொண்டு அவர்கள் கழுத்துப்பட்டியை மட்டும் தவிர்க்கின்றனர். 1980களில் பெண்களுக்கான அதிகார நிலை ஆடைகள் மற்றொரு விதமான பூகோள ரீதியிலான ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுபவையாக அமைந்தன. இதேபோன்று ஓர் ஒருமைப்பாட்டு உணர்வு சில படைகளுக்கு சீருடைகளிலும் பிரதிபலிக்கின்றது. 1990களில் அமெரிக்க ராணுவம் இரண்டாம் உலக யுத்தத்தின்போது, ஜேர்மன் காலாட் படையினர் அணிந்திருந்ததை ஒத்த போர்த்தலை கவசங்களை அறிமுகப்படுத்தியது.

# கல்வியை வஞ்சிக்காதீர்!

கருடன்

இலவசக்கல்வி, இலவசச்சீருடை, இலவச வைத்தியம், இலவசஉணவு, இலவசப் புத்தகங்கள், இலவச உதவிகள், இலவச உயர்கல்வி மற்றும் இலவச வதிவிடங்கள், இலவச மான்மியங்கள் இவ்வாறு இலங்கையர்களுக்கு எத்தனை எத்தனை வாய்ப்புகள், பாக்கியங்கள், வரங்கள். இவை ஆண்டவனால் பிச்சையாக இடப்பட்ட போதும் அதை உணர்ந்து செயற்படுவோர் 35 சதவீதமானோரே. ஏனைய 65 வீதமானனோர் இலவசங்களை உதாசீனம் செய்பவர்களாகவும், அல்லாமலும் அவற்றிற்கு பொறுப்பானவர்கள் கூட அவற்றின் பெறுமதியை உணருமாறு பயனாளிகளை ஊக்கவிக்க முடியாதவர்களாகவும் அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை மலிந்து காணப்படுகின்றனர்.

இந்த அகால நிலை இன்று நேற்றல்ல சுமார் 25 வருடகாலமாக இலங்கையில் வேருன்றியது. அடேயப்பா 45 இலட்சம் ஊழியர்கள் இறைவனின் கருணையினால் போதிய ஊதியத்தை மாதாந்தம் பெறுகிறார்கள். அந்த நிதி, இந்த நிதி, அலவன்ஸ், போனஸ் இப்படி என்று சகல அனுகூலங்களையும் இறைவன் சரியோ, பிழையோ, இலாபமோ, நட்டமோ கண்ணை மூடிக்கொண்டு எல்லோருக்கும் வழங்கி வருகின்றான். இங்கு மாணவர்கள் சிவன் சொத்துகள் அதாவது இறைவனுடைய சொத்துகள். நாம் வீட்டுக்குப் போக அவர்கள் நாட்டை ஆளப்போகின்றார்கள். எனவே மாணவர்கள் எவராகினும் சரி அவர்களது தேவைகளை தவம் ஆகும் படியாக ஒவ்வொரு குருவான வரும் வரம் கொடுப்பார்களாயின் அவர்களே நாம் வணங்கும் கடவுளர்கள் ஆவார்கள். அவர்களின் அறிவுப் பசிக்குத் தீனிபோடவும் வேண்டும். அத்துடன் நின்றுவிடாது போட்ட தீனிக்கு ஏற்ற பரிசையும் காலம் தாழ்த்தாது கொடுக்கவும் வேண்டும். இறைவன் உன்னிப்பாக அவதானித்த வண்ணம் இருக்கின்றான். கல்வி ஒரு பரிசாகும். மாணவர்களுக்கு பரீட்சை ஒரு பரிசாகும்.

மூன்று லட்சம் மாணவர்களின் எதிர்காலம் என்னாலோ, எம்மாலோ வீணடிக்கப்படலாகாது. மாணவர்கள் தம் வாழ்வை எண்ணி தினம்தினம் தவமிருக்கும்போது நாம் ஏதோ சாட்டுக்களைக்கூறி அவர்களின் வாழ்வை நாசமாக்கக்கூடாது. இரண்டேகால்கோடி மக்களுக்கும் அரச வரி சுமத்தப்பட்டுள்ளது. இத்தனை பேரும் வரிச்சுமையால் வீதியில் இறங்கினால் இலங்கையோ நாறிப் போய்விடும். அத்தனை அடுப்புகளும் அடங்கி ஒடுங்கி அணைந்துவிடும். மலையகம் கருகிவிடும். முழு இலங்கையும் பஞ்சம் பசி பட்டினியால் தவிக்கும். இந்த இக்கட்டான நிலையில் பொறுமை காத்தலே தருமம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலில் இருந்தும் மீண்டெழுந்த நெல்லியடி மத்திய கல்லூரி




ஹரிகரன்

நெல்லியடிப் பகுதியில் போரின் கொடூர பசிக்குத் தன்னை முற்றுமுழுதாக இரை யாக்கி அனைத்துக் கட்டுமானங்களையும் முற்றாக இழந்து இன்று பல்வேறு கட்டுமானங்கள் கட்டட அமைப்புகள் மண்டபங்கள் எனப் பல்வேறு வசதிகளுடன் இன்று நிமிர்ந்து நிற்கிறது நெல்லியடி மத்திய கல்லூரி. சாவின் சாம்பலில் இருந்து நிமிரும் பீனிக்ஸ் பறவையின் மீளெழுகையும் கல்லூரியின் மீளெழுகையும் பல்வேறு ஒத்திசைவுகளைக் கொண்டிருப்பதை இந்தக்கல்லூரி யின் வரலாற்றைத் சற்று மேலோட்டமாக பார்க்கும்போதே வெளிப்படும் உண்மை.

1921 ஆம் ஆண்டு நெல்லியடிப் பிரதேசத்திலே மாதிரிப் பாடசாலையொன்று நிறுவப்பட வேண்டும் என்ற அவசிய தேவை அரச அதிகாரிகளாலும் சமூக பெரியோராலும் அதிகம் உணரப்பட்டது. இதற்கான இடம்பற்றி ஆலோசிக் கப்பட்ட போது கரவெட்டிப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டன.

முதல் கட்டமாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்கப் பாட சாலைகள் குழுவின் தலைவர் 1918 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் விடுத்திருந்த கோரிக்கையின் அடிப்படையில் நில அளவைத் திணைக்கள ஆணையாள ரால் 1919 ஆம் ஆண்டு அண்ணளவாக இரண்டு ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு, 1921 ஆம் ஆண்டு மாதிரிப் பாடசாலையாக இந்தக்கல்லூரி நிறுவப்பட்டது.

> **பீனிக்ஸ் பறவையின் மீளெழுகையும் கல்லூரியின் மீளெழுகையும் பல்வேறு ஒத்திசைவுகளை கொண்டிருப்பதை இக்கல்லூரியின் வரலாற்றை சற்று மேலோட்டமாக பார்க்கும் போதே வெளிப்படும் உண்மை**

அத்துடன் இலவசக்கல்வியின் தந்தையான சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவின் 54 மத்திய மகா வித்தியாலயங்களை அமைக்கும் விசேட திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட 4 மத்திய மகா வித்தியாலயங்களில் வடமராட்சிப் பகுதியில் நிறுவப் பட்ட ஒரே ஒரு மத்திய மகா வித்தியாலயமாகவும் இந்தக் கல்லூரி காணப்பட்டது.

இதன் பின் காலத்துக்குத் காலம் வந்த அதிபர்களான சிவப்பிரகாசம், இரத்தினசபாபதி, சிவசிதம்பரம், கே.குண ரட்ணம், வீ.கே.நல்லையா ஆகிய பல கல்விச் சிற்பிகள் இந்தக்கல்லூரியின் பெருவளர்ச்சியின் தூண்களாகினர். இவர்களின் பெரு முயற்சியும் அரசியல்வாதிகள், நலன் விரும்பிகளின் அளவு கடந்த பங்களிப்பும் கல்லூரியை இன்னும் வளர்த்தெடுத்தன.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன்.கந்தையா வின் முயற்சியினால் பெரும் கட்டடங்களும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இராசலிங்கத்தினால் ஆராதனை மண்டபமும் அமைக்கப்பட்டன.

இத்தகையோரின் பங்களிப்பும் கல்லூரியின் சிறப்பும் புகழும் நாட்டின் பல பிரதேச மாணவர்களும் இந்தக் கல் லூரியில் அனுமதி பெறுவதற்காக முண்டியடிக்க வைத்தது. குடாநாட்டு மாணவர்களைத் தாண்டி நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக் கூடியளவிலான விடுதி வசதிகளுடன் இயங்கிய கல்லூரியாக இதுவே திகழ்ந்தது.

வடமராட்சிக் கல்வி வரலாற்றில் உயர்தரக் கல்வியைத் திறம்பட மாணவருக்கு போதித்து, கல்விப் பணியாற்றிய இந்தக்கல்லூரியின் பெரும் பணி வரலாற்றில் விதந் துரைக்கப்படுகின்றது.

உள்நாட்டுப் போரும் அதன் விளைவுகளும் நெல்லியடி மத்திய கல்லூரியையும் பாதித்தன. 1987 ஜீலை ஐந் தாம் திகதி இரவுவேளை வரலாற்றில் இடம்பிடித்த குண் டுத்தாக்குதல் கல்லூரியின் அனைத்து பௌதீக வளக் கட்டமைப்புகளையும் இல்லாதாக்கியது. இதன் பின் இந்தப் பாடசாலை தனது நிலையை எட்டிப்பிடிக்க முடியாதபடி பின்னடைவையும் வளப்பற்றாக்குறையையும் சந்தித்தது. குறிப்பாக 1990 ஆம் ஆண்டின் பாடசாலைப் பிரிப்பும் பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையில், பெரும் தளம் பல் நிலையை ஏற்படுத்தியது. இதன் பின் கல்லூரியின் அதிபர் பொறுப்புகளை ஏற்றவர்களின் முயற்சியினால் சற்று நிமிர்வான நிலையை அடைந்து இன்று தேசியப் பாடசாலையாக தலை நிமிர்ந்து நிற்கிறது.

குறிப்பாக அதிபர்களான சிற்றம்பலம், எஸ்.சேதுராஜா, கிருஷ்ணகுமார் ஆகிய அதிபர்களின் நிர்வாகத் திறமை ஆற்றலால் இந்தப்பாடசாலை பழைய நிலையை எட்டிப் பிடித்தது எனலாம்.

குறிப்பாக இந்தப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற எஸ். சேதுராஜா புதிய கட்டுமான அபிவிருத்திக்கு வழிகோலியதோடு தனது நிர்வாகத் திறனால் அபிவிருத்தி மாற்றத்தையும் ஏற்படுத்தினார். அத்துடன் அவரின் காலத்தில் இந்தக்கல்லூரி தேசியப் பாடசாலையாக பெரு வளர்ச்சி பெற்று, ஆய்வுகூடங்கள், ஆராதனை மண்டபங்கள், கணினி நிலையங்கள், வகுப்பறைக் கட்டடங் கள் , நவீன தொழில் நுட்ப மையங்கள் எனப் பல்வேறு கட்டுமானங்களுடன் இந்தக்கல்லூரி எழுந்தது. தற்போது அதிபராகப் பதவி வகிக்கும் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் இந்தப்பாடசாலையை அபிவிருத்தி யின் திசைக்குக் கொண்டு செல்ல மேலும் அக்கறையுடன் செயற்படுவதை அவதானிக்கமுடிகிறது.

இன்றைய நிலையில் மஹிந்தோதய ஆய்வு கூடங்கள் , நவீன திறன் வகுப்பறைகள் , விளையாட்டு அரங்குகள், கணினி ஆய்வுகூடங்கள், தொழில் நுட்ப அலகுகள், நவீன கணினிப் பயன்பாட்டுடனான நூலக வசதிகள் எனப் பல் துறைகளிலும் பெருவளர்ச்சி பெற்றுள்ளது.

இன்று நூற்றாண்டைக் காணும் இந்தக்கல்லூரியானது தன் கல்விப் பணியின் பெருமையால் பல்வேறு சாதனை யாளர்களை உருவாக்கி இருப்பது சிறப்பானதாகும்.

ஏற்றமிகு கல்வி வளர்ச்சியும் சிறப்பும் அழகும் மிக்க கல்லூரி சூழலும் இந்தக்கல்லூரியின் கல்வி வளர்ச்சி யின் குறிகாட்டியாகும். இதனைத் தாண்டி வருடாவருடம் நாட்டின் பரந்து விரிந்த தொழில்துறைக்கும் கல்வித் துறைக்கும் பெறுமதியான மனிதவளங்களை உருவாக்கி வழங்குதல் இந்தக்கல்லூரியின் மாபெரும் சிறப்பின் அடை யாளமாகும். எனவே நூற்றாண்டைத் தொடும் இந்தக்கல்லூரியானது மேலும் பல்லாயிரம் ஆண்டு கள் தன் கல்விப் பணியை ஆற்ற நூற்றாண்டு நாளில் வாழ்த்துவோமாக. ■




# கர்ணன் படைப்பகத்தின் குறும்படப்போட்டி விருதுகள்




கர்ணன் படைப்பகம் நடத்திய குறும் படப்போட்டியில் கிஷாந்தின் இயக் கத்தில் உருவான "கேளன்" குறும்படம் முதலி டத்தைப் பிடித்துள்ளது. குறும்படப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் வழங் கும் நிகழ்வு 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடைபெற்றது.


குவியம் மீடியா நிர்வாக இயக்குநர் கனகநா யகம் வரோதயன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் குறும்படப்போட்டியில் முதலிடத்தை கிஷாந் இயக்கிய "கேளன்" குறும்படமும் இரண்டாமிடத்தை ஜனா மோகேந்திரனின் "வெற்றிக்கதை" குறும்படமும் 3 ஆம் இடத்தை ஷாஜாவின் "புதிய பாதை" குறும்படமும் பெற் றுக்கொண்டன. இவர்களுக்கு வெற்றிக்கேடய மும் முறையே 50 ஆயிரம், 30 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபா பரிசுத்தொகை யும் வழங்கப்பட்டது. அத்துடன் முதல் 10 இடங்களுக்குள் தெரிவான ஏனைய 7 குறும்படங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழ் மற்றும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரி யர் கலாநிதி ரகுராமும் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவ கலாநிதி சிவன் சுதன் (தயாரிப் பாளர் – தூவானம் திரைப்படம்), யாழ். வலயக்கல்வி முன்னாள் பணிப்பாளர் முத்து இராதாகி ருஷ்ணன், சிரேஷ்ட ஊடகவி யலாளர் பாரதி இராஜநாயகம், கர்ணன் படைப்பக நிறுவுநர் சண்முகநாதன் சபேசன், யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கை கள் துறைத்தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்த னன் ஆகியோர் கலந்துகொண்டனர். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# யாழில் சிறப்பாக இடம்பெற்ற இரு நூல்களின் வெளியீடு




இங்கிலாந்தைச் சேர்ந்த எழுத்தாளர் என்.செல்வராஜா எழுதிய யாழ்ப்பாணம் பொதுநூலக வரலாறு தொடர்பிலான பல்வேறு அரிய தகவல்களையும் கொண்ட 'றைசிங் ப்ரொம் த ஆஷஸ்' (Rising from the Ashes) என்ற ஆங்கில நூலும், யாழ்ப்பாண பொதுநூலகம் என்கிற தமிழ் நூலினதும் வெளியீட்டு விழா கடந்த வாரம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வரவேற்புரையை யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகரான திருமதி அனுசியா சிவகரன் ஆற்றினார். குலசிங்கம் வசீகரனின் வெளியீட்டுரையினைத் தொடர்ந்து நூல்வெளியீடு இடம்பெற்றது. நூல்களின் முதற் பிரதிகளை இரு நூல்களின் ஆசிரியரான என்.செல்வராஜா வெளியிட்டு வைக்க கல்வியியலாளரும், எழுத்தாளருமான நடராஜா அனந்தராஜ் பெற்றுக் கொண்டார்.

'றைசிங் ப்ரொம் த ஆஷஸ்' நூல் பற்றிய கருத்துரையை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ். பொதுநூலகம் குறித்த நூல் தொடர்பிலான கருத்துரையை சற்குணம் சத்தியதேவன் நிகழ்த்தினார். நூலாசிரியர் கௌரவிப்பைத் தொடர்ந்து இரு நூல்களின் ஆசிரியரான என்.செல்வராஜாவின் ஏற்புரை இடம் பெற்றது. யாழ். பொதுசன நூலகத்தின் உதவி நூலகரான அனிதா தயாளன் நன்றியுரையை நிகழ்த்தினார். ■

---

# மதி இறுக்கக் குழந்தைகளும் அவர்களுக்கான கல்வியும்

— சஜனிகா ஸ்ரீகாந்த்
யாழ். பல்கலைக்கழகம்



கல்வியியலிலே விசேடகல்வி என்ற எண்ணக்கரு முக்கியமான பங்கினை ஆற்றிவருகின்றது. அந்த விசேட கல்விப் பரப்பினுள் உள்ளடங்குவது மதி இறுக்கக் குழந்தைகளை வளப்படுத்துவதற்கான கல்வி முறையாகும். உடல் உள்ளுறுப்புகள், அவயவங்கள், புலனுறுப்புகள் அத்துடன் மூளையின் தொழிற்பாடு மற்றும் விருத்தி நிலைகளில் பிறக்கும் போதோ அல்லது பிறப்பின் பின்னரோ உருவாகின்ற பாதிப்புகளால் குறிப்பிட்டளவு பிள்ளைகள் விசேட தேவையுள்ள பிள்ளைகள் என்ற பிரிவாக சமூகத்தில் வாழ்கின்றனர். இவற்றில் மூளை விருத்திக் கோளாறுகளுடன் குறிப்பிட்டளவு பிள்ளைகள் பிறக்கின்றனர். இவர்களில் மாறுபட்ட பல பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்ற குழந்தைகளும் உள். அதில் அண்மைக் காலங்களில் உலகளாவிய ரீதியில் வேகமாக அதிகரித்த எண்ணிக்கையில் மதி இறுக்கமுடைய பிள்ளைகள் அதாவது 'ஓட்டிசம்' குழந்தைகள் உள்ளனர்.

சமுதாய நிலையிலிருந்து தனித்து விலகித்தெரியும் இவர்களை, 'ஓட்டிசம்' நிலையிலுள்ளவர்கள் என்கிறோம். தமிழில் இந்நிலைக்கு 'மதி இறுக்கம்' என்ற பதத்துக்கு மேலதிகமாக, 'தற்சிந்தனையாளர்கள்', 'தற்புனைவு ஆள்வு' என்றும் அழைப்பதுண்டு. காரணம் இவர்கள் தங்களுக்கென ஓர் உலகத்தை உருவாக்கி அதிலே சஞ்சரிப்பவர்களாய் இருப்பதோடு, எப்போதும் சிந்தனை வயப்பட்டிருப்பவர்களாகி, சமூகத்தோடு ஒட்டாது இருப்பார்கள். லியோ கேனரின் அறிக்கை, அஸ்பெர்ஜரின் ஆய்வறிக்கை என்பன 'ஓட்டிசம்' பற்றிய ஆய்வில் முக்கியமான குறிப்புகளாகும். சுருக்கமாக கூறின், 'மதி இறுக்கம் என்பது ஒரு குழந்தையின் இயல்பான வளர்ச்சி நிலையில் ஊடுருவிப் பரவக்கூடிய விருத்தி நிலைக்கோளாறுகள் எனப்படும்.' அமெரிக்க உளவியல் சங்கம் மன இறுக்கக் குழந்தைகளிடம் காணப்படும் தொடர்பாடல் அல்லது கருத்துப் புலப்படுதல் பாதிக்கப்படுதல், சமுதாயச் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல், தனக்குத் தானே சுயமாகச் செய்யும் நடத்தைகள் போன்ற முக்கியமான மூன்று பிரச்சினைகளை உள்ளடக்கி ஆறு நிலைகளாகப் பிரித்துள்ளனர்.

### எவ்வாறு இனங்காணலாம்?

இவ்வாறான மதி இறுக்கமுடைய குழந்தைகளை எவ்வாறு இனங்காணலாம்? என்பதை அறிதலே அவர்களுக்கான கல்வியின் அடிப்படைப் படிமுறையாகும். அதன்படி மதி இறுக்கமுடைய குழந்தைகள் பிறந்து ஆறு மாதமாகிய பின்பும் பெரியளவான புன்சிரிப்போ, அல்லது ஏனைய உணர்வு பூர்வமான, மகிழ்ச்சியான வெளிப்பாடுகளோ இல்லாதிருத்தல், ஒன்பது மாதமாகியும் ஒலிகளையோ முகபாவ வெளிப்பாடுகளையோ புன்சிரிப்பையோ கொடுத்து வாங்கும் திறனற்று இருத்தல், பன்னிரண்டு மாதமாகியும் மழலை ஒலிகள் வெளிப்படாது இருத்தல், பன்னிரண்டு மாதங்களாகியும் ஒருவரைப் பார்த்து ஒன்றைக் காட்டும், அடைய எத்தனிக்கும் அல்லது கையசைக்கும் திறன்கள் இல்லாதிருத்தல், பதினாறு மாதங்களாகிய பின்னும் ஒரு வார்த்தையேனும் பேசாது இருத்தல், இரண்டு வயதாகியும் அர்த்தமுள்ள இரு சொற்களைச் சேர்த்து சொந்தமாக பேசுகின்ற திறன் இல்லாதிருத்தல் மற்றும் எந்த வயதில் இருந்தாலும் ஏற்கனவே விருத்தியடைந்த மழலை ஒலி பேச்சு மற்றும் சமூகமயமாதல் திறன்கள் மறைந்து போதல் உட்பட அசாதாரண பண்பியல் மற்றும் நடத்தைகளைக் காணலாம்.

இவ்வாறான பிள்ளைகளிடத்து மதிப்பீடு செய்தல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் காணல் எனும் அடிப்படையில் ஒவ்வொரு நிலையிலும் கவனமுடன் செயற்படுவதன் மூலம் முன்னேற்றத்தைக் காணமுடியும். மதிப்பீடு செய்தல் எனும்போது குழந்தைகளுக்கு இயல்பாகவே திறன்கள் இருக்கும். செய்யும் ஒரு சில செயல்களையும் எந்த அளவுக்குத் திறம்படச் செய்கிறது என்பதை அறியவும், கல்வியில் மதிப்பீடு மற்றும் உளவியல் மதிப்பீடு ஆகியவற்றின் மூலம் இவற்றை அறியலாம். இவற்றில் உடல் இயக்கத்திறன், தன் உதவிச் செயல்கள், தகவல் பரிமாற்றம், கல்விச் சமூக மாற்றம், தொழில்சார் திறன்கள் ஆகியவை அடங்கும்.

திட்டமிடல் எனும் போது குழந்தை எவ்விடங்களில் பின்தங்கி இருக்கிறது என்பது அறியப்பட்ட பிறகு அவற்றை முறையாக பட்டியலிட்டு அவற்றுள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று அறிந்துகொள்ளவேண்டும். உதாரணமாக அமைதியாக இருக்கும் குழந்தை திடீரென்று அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு தன்னோடு பேசுபவர்களது கருத்தைக் கேட்காது இருக்குமென்றால், இதில் முக்கியமான பிரச்சினை என்ன? அதனைத் தீர்க்க எவ்வாறான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்? யாரால் கொடுக்கப்பட வேண்டும்? போன்றவற்றைத் திட்டமிடவேண்டும். குறித்த பிரச்சினைகளைத் தீர்க்கும் தரப்பினரால் பரிந்துரைக்கப்படும் விடயங்கள் எல்லாம் அனைத்துக் குழந்தைகளுக்கும் பொதுவானவை அல்ல. ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வித் திட்டம் மாறுபடும். அதனால் இதன் பெயர் தனியாள் கல்வித் திட்டம் எனப்படுகிறது. குறைகள் அறிந்து என்ன செய்ய வேண்டும் என்ற நிலைக்கு வந்ததன் பின்னர் அதற்கான நடைமுறைப்படுத்தல்கள் இடம்பெறும். சாதாரண பிள்ளைகள் போலல்லாது மதி இறுக்கமுடைய குழந்தைகள் உடனே நாம் கூறும் விடயங்களுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள். ஆகவே அதற்கு ஏற்றாற்போல கல்வி முறைகள் இடம்பெறவேண்டும் . குழந்தை விரும்பும் நேரத்தில் மாத்திரம் கற்பிக்கவேண்டும், ஒரே நேரத்தில் பலவற்றை திணிக்கக் கூடாது, பிள்ளைக்கு இயல்பான சூழ்நிலையில் மட்டுமே கற்பிக்கவேண்டும், இடையூறு இல்லாத கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும், வலுவூட்டிகளைப் பயன்படுத்த வேண்டும், கற்பிக்கும் நேரம் மாறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், பிள்ளையின் பெற்றோரோடு இடையூடாட்டத்தைப் பேணுவதோடு வீட்டுச்சூழலில் பிள்ளையின் நடத்தைகளை அவதானிக்க பெற்றோருக்கும் போதிய தெளிவினைக் கொடுக்கவேண்டும்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளைச் செய்விக்கின்றபோது பெறுபேறுகள் உடனடியாக கிடைக்கப்பெறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முன்னேற்றம் காணல் நடவடிக்கை இடம்பெறும். எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் ஏற்படும் வரை பயிற்சியினைத் தொடரவேண்டும். அதற்காக, படம் விளக்க முறை மற்றும் எளிதாக போதிக்கும் பாடப்புத்தகங்களை உபயோகித்தல் வேண்டும், பிள்ளையின் வளர்ச்சிக்கு தகுந்த மாதிரி கால அளவில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம், பாடங்களை எழுத, வீட்டு வேலைகளைச் செய்ய கால அவகாசம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், சுற்றுச்சூழலுடன் தன்னைப் பொருத்திக் கொள்ளத் தகுந்தவாறு இடங்களை அமைத்தல் வேண்டும், எல்லாவற்றுக்கு மேலாக புரிதலோடு அன்பாக நடக்கக்கூடியவர்களாக ஆசிரியர்கள் இருக்கவேண்டும்.

### தேவைப்படும் நடைமுறைகள்


மதி இறுக்கமுடைய பிள்ளைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பல நியம நடைமுறைகள் உள்ளன. அவற்றுள் பிரயோக நடத்தை சார் பகுப்பாய்வு, பகுப்பாய்வு சார்ந்த பரீட்சார்த்த கற்கை மாதிரியமைப்பு, ஒன்றாக இருக்கும் காலம் அல்லது பல்வேறு தொடர்புகளின் மாதிரி அமைப்புகள், படங்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலமான தொடர்பாடல் முறை, பிரதான பதில் நடவடிக்கை சிகிச்சை முறை, தொடர்புகளை வளர்க்கும் தலையீடுகள், சமூகத் தொடர்பாடல், உணர்வுகளைக் கட்டுப்படுத்தல், ஏனையவர்களோடு கொடுக்கல் வாங்கலைச் செய்ய உதவுதல், 'ஓட்டிசம்' உள்ள பிள்ளைகள் அது சம்பந்தமான தொடர்பாடல் அசௌகரியங்களைக் கொண்டுள்ள பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களுக்கு கல்வி அறிவூட்டும் முறை, மொழி, கற்றல் திறன்களை ஆராய்வு செய்தல் என்பன முக்கியமானதாகும்.

மதி இறுக்கமுடைய பிள்ளைகள் சமூகத்தில் அதிகரித்த நிலையில் அவர்களை வளப்படுத்தக்கூடிய இத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கின்றார்களா? என்பது யோசிக்க வேண்டிய பிரச்சினையாகும். முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் மாற்றுக் கருத்துகளும் எழுந்துள்ள நிலையில் மதி இறுக்கமுடைய பிள்ளைகளுக்கான கல்வியில் ஈடுபடுவோருக்கான வாண்மை விருத்தியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேடகல்வி, குழந்தை விருத்திச் செயற்பாடுகள் மற்றும் கல்வி உளவியல் தொடர்பான பூரண விளக்கமுடையவர்களாக இருப்பது மிக அவசியமாகும்.

வளமுடைய எதிர்காலத்துக்கு வளமுடைய பிள்ளைகளை உருவாக்குவது ஆசிரியத்துவத்தின் மகத்துவமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் · 04 · 04 · 1934

மறைவு · 25 · 07 · 2023

### திரு. கதிரவேலு நடராசா (ஆசாரி)

காளிகோவிலடி, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நடராசா நேற்று (25.07.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோமளத்தின் அன்புச் சகோதரனும், சோதிமணி, செல்வராணி (ஸ்ரீ துர்க்கா சவுண்ட்ஸ்), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் மனோகரன், கிருஸ்ண பவானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராசா, ரஜனி, கமலவதனன், மோகனா ஆகியோரின் அன்பு மாமனாரும், தமிழினி, தேனுஜா, வானுஜா, சங்கவி, கவினா, பவிராஜ், ஆதித்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தஸ்மிகனின் அன்புப் பூட்டனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2023) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி,
களபூமி, காரைநகர். (CS 25630) AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

077 824 6857, 077 400 4102

## மரண அறிவித்தல்



தோற்றம் · 21 · 08 · 1944

மறைவு · 23 · 07 · 2023

### திருமதி திருக்கேஸ்வரி இராசேந்திரம்

மட்டக்களப்பு கோட்டைமுனையைப் பிறப்பிடமாகவும், மாதனை, பருத்தித்துறை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருக்கேஸ்வரி இராசேந்திரம் கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், இராசேந்திரத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சௌந்தரமாணிக்கம், சோமசுந்தரம், அருளானந்தம், மகேஷ், கமலதாஸ், பரமேஸ்வரி, நாகரட்ணம் மற்றும் தங்கலட்சுமி, சௌந்தரலக்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரஷாந், காண்டீபன், சோபிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நேமினா, மகாதேவன் ஆகியோரின் மாமியாரும், நவியா ருத்ரேஷ், கஷ்வினி, கிஷோ, சுதீப் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரையடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதனை,
பருத்தித்துறை. (CS/51407)AH-1

தகவல்
காண்டீபன்

077 224 7874

## மீண்டும் வீழ்கிறது ரூபா!

கொழும்பு, ஜூலை 26


அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் தகவல்களின் படி நேற்று டொலரின் கொள்வனவு விலை 323.03 ரூபாவாகவும், விற்பனை விலை 336.16 ரூபாவாகவும் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ-ம)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



### அமரர் அகிலன் அனுஷன் (ஹொலன்ட்)

(Business Analyst at Air France - KLM Student Business IT and Management, Hoge school in Holland) Anushan Building Chunnakam, Ahil Rest Maruthanarmadam, Inuvil.)



அன்பின் இருப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே! பண்பின் சிகரமே!
எம்மைவிட்டுப் பிரிந்து 45 நாட்கள் ஆனதே
இதயங்கள் நொருங்க கண்ணீர் துளியாக்கி
கண் இமைக்கும் நேரத்தில் எங்கே பயணமானாய்
விதிசெய்த சதியோ இல்லை சதி செய்த விதியோ
நாம் அறியோம்.

உன் அப்பா அம்மா தங்கைக்கு துணாய்
துணை நிற்பாய் என நம்பி இருந்தோமே
எல்லாம் கணவாகிப் போனதுவே!
ஆறாது மாறாது உன் துயர் தீராதையா
நீ எங்களை விட்டு தூரத்தில் இல்லை
நினைவுகளில் இருக்கிறாய் எங்கும் போகவில்லை
எங்கள் இதயங்களில் வாழ்கிறாய்
மீண்டும் எமது குடும்பத்தில் வந்து எமக்கு ஆறுதல் தந்துவிடு
உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியை அறிந்து எமக்கு பல வழிகளிலும் உதவி செய்தவர்கள், ஆறுதல் அறிவித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

"திருப்பதி"
கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(CS 25632)A-1

தோற்றம் - 03.10.2001 மறைவு - 12.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் ஞானலக்ஷ்மி நவரெத்தினம்

( முன்னாள் வயலின் ஆசிரியை - உடுவில் மகளிர் கல்லூரி )

திதி - 26.07.2023

அன்பால் அரவணைத்து
பண்பாய் எமைக் காத்து
நின்ற எம் குலவிளக்கே..
மண்ணுலக வாழ்வு நீங்கி
விண்ணுலகம் சென்று
ஆண்டொன்று ஆனதோ
ஆறவில்லை எம் மனது.
ஓம் சாந்தி!

கடந்த 06.08.2022 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று மதியம் (26.07.2023) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மண்ணில் 18.03.1935 விண்ணில் 06.08.2022


**குடும்பத்தினர்.**

தி. நவரெத்தினம் ( மெம்பர்) 077-6699166
போக்காலை வீதி, உடுப்பிட்டி

(CR/40305)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1934 மறைவு 22 . 07 . 2023



## தம்பையா சுந்தரலிங்கம்

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சுந்தரலிங்கம் கடந்த (22.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கசிவம் (ஆசிரியர்), சொர்ண பத்மாவதி (கனடா), அம்பிகாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி (ஆசிரியை), துரைச்சாமி (வர்த்தகர் - கொழும்பு) மற்றும் பிரகலாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திரஜித், ரோகினி, அருணந்தி ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், பூரணகுமார், உதயகுமார், பத்மஸ்ரீ, ஸ்ரீகுமார், இந்திரகுமார், விஜயராஜா ஆகியோரின் அன்பு மாமாவும், திருமதி அன்பானந்தன் (உருத்திரா) வின் உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2023) புதன்கிழமை 16/1, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் உள்ள மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

(CS/51399)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 08 . 1948 மறைவு 22 . 07 . 2023



## திருமதி ஜெயரட்ணம் அருளம்மா

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயரட்ணம் அருளம்மா கடந்த (22.07.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - ஞானம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற கனகரத்தினம் - செல்லமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும், ஜெயரட்ணத்தின் (அப்பன்) அன்பு மனைவியும், சறோஜினிதேவி, ஞானசம்பந்தன், கனகநாயகம், செல்வராசா, தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயதரன் (சுவிஸ்), ஜெயதாரகை (சுவிஸ்), ஜெயசதாத், ஜெயகனிஸ்ரா, ஞானவதனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அஸ்வினி (சுவிஸ்), சசிக்குமார் (சுவிஸ்), றயனா, சுகிர்தன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆசிரியர்), றிஜீவ்காந் (கனடா), அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனாகிதா, ஜெனிஸ், சஜின், சஸ்வின், சபரினா, டனுஷா, டன்ஷிகா, லக்ஸயன், மதுமிதன், றஸ்மிகா, ரித்திகா, தபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2023) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாநிதி வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

தகவல்
**குடும்பத்தினர்.**

(CS/51405)AH-1

**077 667 9793**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயத்தின் செயற்பாடு மத நல்லிணக்கத்தின் ஆரம்பம்!

## யாழ். மறைமாவட்டத்தின் குருமுதல்வர் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

நல்லூர் ஆலயத்துக்குள் கத்தோலிக்க மதகுருக்களை ஆடையுடன் அனுமதித்தமை, மத நல்லிணக்கத்துக்கான ஆரம்பப் புள்ளியாகப் பார்க்கின்றோம் என யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குள் நாட்டின் ஜனாதிபதி செல்வதாக இருந்தால்கூட மேலாடை கழற்றித்தான் செல்ல வேண்டும் என்பது ஆலய விதிமுறை. அதற்கமைய இன்றையதினம் (நேற்று) இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதியுடன் நானும் மேலும் ஒரு குருவும் சென்றிருந்தோம்.

உரிய நடைமுறைகளை பின்பற்றி நாங்கள் ஆலயத்தின் முன்றிலில் நின்று வெளியேறியபோது நல்லூர் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் எங்களை மதகுருக்களின் ஆடையுடன் உள்ளே செல்லமுடியும் என அழைத்திருந்தார்கள். அந்த அழைப்பை ஏற்று ஆலயத்துக்குள் சென்று முருகனைத் தரிசித்தோம். எனவே இந்த விடயமானது மத நல்லிணக்கத்துக்கான ஒரு முன்னுதாரணமாகும். அத்துடன் மத நல்லிணக்கத்துக்கான ஓர் ஆரம்பப் புள்ளி என்றும் கூறலாம் - என்றார். (அ-ம)

# ஹர்த்தாலுக்கு ஆதரவு முன்னணியும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழர் தாயகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு, முழுமையான ஆதரவை வழங்குவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்தது.

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என நாம் ஏற்கனவே நாடாளுமன்றில் வலியுறுத்தியுள்ளோம். வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினராலும் இவ்வாறு சர்வதேச விசாரணை குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாம் இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தினர் சரியாகச் சிந்திக்கின்றார்கள். இவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குக் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும். அதனையும் தாண்டியே அவர்கள் நகருகின்றார்கள். இந்த அகழ்வுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளன. இது ஏற்கனவே இருக்கின்ற சான்றுகளை அழிப்பதாக அமையக் கூடாது மாறாக ஐ.சி.ஆர்.சி. போன்ற சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும் இது இடம்பெறவேண்டும். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு பலம் சேர்க்குமாறு தமிழர்களை மட்டுமல்லாது வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களையும், நீதி நியாயத்துடன் செயற்படும் சிங்கள மக்களையும் கோருகின்றோம் - என்றார்.

(அ-ம-125-26)

# முட்டைக்கு நிர்ணய விலை நேற்று நள்ளிரவுமுதல் நீக்கம்!

முட்டைக்கு விதிக்கப்பட்டிருந்த நிர்ணய விலை, நேற்று நள்ளிரவு முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் 'சதொச'விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றை 35 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த நிலையிலேயே முட்டை மீதான கட்டுப்பாட்டுவிலை நேற்று நீக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### ஹர்த்தாலுக்கு...

வடக்கு - கிழக்கில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆதரவைத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவா ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் இது தொடர்பில் நேற்றுத் தெரிவித்ததாவது:-

தமிழினத்தின் மீதான இனவழிப்பை இந்த மனிதப்புதைகுழிகள் பறைசாற்றுகின்றன. எனவே இந்த மனிதப் புதைகுழி விவகாரம் சர்வதேசத்தால் அணுகப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், அவற்றுக்கு நீதிகோரியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி வட்டுவாகல் பாலத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரையில் போராட்டம் நடைபெறவிருப்பதுடன், வடக்கு - கிழக்கு ரீதியாக ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

தமிழர்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்ட இனமாக உள்ளனர். எங்களுக்குத் தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகின்றது. நாங்கள் சுதந்திரமாக நினைவேந்தல்களைக்கூட மேற்கொள்ள முடியாதுள்ளோம். ஆகவே, இந்தப் போராட்டத்தில் கட்சி பேதமின்றி அனைவரும் இணைந்து போராட்டத்தைப் பலப்படுத்தவேண்டும் - என்றார்.

(அ-ம-125,20,26)

### சர்வகட்சி....

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடனான சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நாளை பிற்பகல் நடைபெறவுள்ளது. இதற்காக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இக் கலந்துரையாடல் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வகட்சி மாநாட்டில் பேசப்படும் விடயங்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் பற்றி எமக்கு இன்னும் தெரியாது. நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் குறித்து பேசப்படும் என ஊகிக்கின்றோம். இது தொடர்பில் அரச தரப்புக்குள்ளேயே மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனவே, இது விடயம் தொடர்பில் அரசின் உறுதியான நிலைப்பாடு அவசியம். நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன் கருதியே நாம் பேச்சுக்குச் செல்கின்றோம். கலந்துரையாடல் நடைபெறும்வேளை, இந்த பேச்சுமூலம் நாட்டுக்கு நன்மை பயக்காது, இது அரசியல் ஏமாற்று வித்தையென தெரியவந்தால் பேச்சில் இருந்து வெளியேறுவோம்' - என்றார். (அ-ம-44,22)

### தமிழர்கள்...

தீர்கள். அவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள் - இவ்வாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன்.

கொழும்பு, பொரளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'கறுப்பு ஜூலை' நினைவேந்தல் நிகழ்வைச் சிங்கள ராவய அமைப்பினர் மற்றும் பொலிஸார் - இராணுவத்தினர் இணைந்து குழப்பியிருந்தமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'இறந்தவர்களை நினைவேந்துவது ஒரு நாட்டினுடைய பிரஜையின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை எவரும் மீறமுடியாது. அதை மீறுவது பெருந்தவறு. இப்படி[illegible] நாம் அனை[illegible]டிக்க வேண்டும். இந்தச் செயலை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த அராஜகச் செயலுக்கு எதிராக எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இனவாத அமைப்புகள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் மக்கள் மீது அரங்கேற்றும் அராஜகச் செயல்களை அரசு கைகட்டி வேடிக்கை பார்க்கக்கூடாது. அதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். அதேசமயம் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் எவரும் நடக்கக்கூடாது. சிலநேரங்களில் சிலர் குழப்பங்களை ஏற்படுத்துவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய சூழ்ச்சித் திட்டங்களுக்கு நாம் எவரும் பழிபோகக்கூடாது. அதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். அஹிம்சைப் போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது மக்களுடைய அடிப்படை உரிமை. அவற்றை மறுப்பது தடுப்பது பிழை' - என்றார். (அ-ம-22)

### '13' இனை...

யிலான அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டால், அதற்கு ஆதரவு வழங்குவோம் என்று சுதந்திரக்கட்சி அறிவித்தது.

சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் சுதந்திரக் கட்சி பங்கேற்கும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. எனினும், பொலிஸ், காணி அதிகாரங்களை பகிர்வது குறித்து உரிய பொறிமுறை அவசியம். சர்வகட்சி மாநாட்டில் சுதந்திரக்கட்சி பங்கேற்கும். அரசால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும்' - என்றார். (அ-ம-44)

### [illegible]

[illegible] தாக்குதல் நடத்திய சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஊர்காவற்றுறையில் அரச பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் நேற்று மாலை 4.30 மணியளவில் ஊர்காவற்றுறை - காரைநகர் படகுச் சேவையூடாகச் செல்வதற்குப் படகில் வந்து ஏறியுள்ளனர். இந்த நிலையில் குறித்த படகுச் சேவையை இயக்கும் அரச ஊழியர், மதுபோதையில் இருந்ததுடன், 'நான் குறிப்பிட்ட நேரத்துக்கு மேலதிகமாகக் கடமைபுரிகின்றேன்' எனத் தெரிவித்து பொதுமக்களை ஏசியுள்ளார். அத்துடன், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இதையடுத்து இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். (அ-ம-125)

### வல்வெட்டித்...

குட்டிமணி உள்ளிட்டோரினதும் 40ஆவது நினைவேந்தல் வல்வெட்டித்துறையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் சிவாஜிலிங்கத்தின் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ-ம-26)

### கர்தினாலுக்கு...

ஊடக்வே, யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்துக்கும் நேற்றுச் சென்றுள்ளார். அவருடன் யாழ். மாவட்ட குரு முதல்வரும் ஆலயத்தைத் தரிசித்தார்.

அவர்கள் ஆலயத்தின் முன்றிலில் நின்றபடி ஆலயத்தைத் தரிசித்துவிட்டு வெளியேறியபோது, நல்லூர் கந்தசாமி ஆலய நிர்வாகத்தினர் அவர்களை, மத குருவின் ஆடையுடன் உள்ளே சென்று வழிபட முடியும் என அழைத்தனர். இதையடுத்து அருட்தந்தையர்கள் ஆலயத்துக்குள் சென்று நல்லூர்க் கந்தனைத் தரிசித்தனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒகஸ்ட் முதல் கொழும்பு - மன்னார் ரயில் சேவை ஆரம்பம்



மன்னார், ஜூலை 26

கொழும்பு - தலைமன்னார் ரயில் சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மீளவும் ஆரம்பிக்கப்படும் என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வடக்கு மாகாணத்துக்கான ரயில் பாதை திருத்தம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு - வடக்கு மாகாண ரயில் சேவை ஆரம்பமானது. ஆயினும் மன்னாருக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இதுகுறித்து மன்னார் மாவட்டச் செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மன்னாருக்கான புகையிரதத் தடங்கள் சீராகவுள்ளனவா என பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ரயில் சேவை இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-213)

## 13 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தின் பிடியிலுள்ள கிளி. பொதுநூலகக் காணி!

### விடுவித்துத் தருமாறு ஜனாதிபதியிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 26

**இராணுவத்தின்பிடியில் கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாகவுள்ள கிளிநொச்சி பொதுநூலகம் மற்றும் பொதுவிளையாட்டு மைதானம் ஆகியவற்றுக்குச் சொந்தமான காணியை முழுமையாக விடுவிக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஜனாதிபதிக்கு நேரடியாக எழுத்துமூலம் கையளித்து அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அந்த எழுத்துமூல கோரிக்கையில் மேலும் உள்ளதாவது:

கரைச்சிப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி நகர பொதுநூலகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவற்றுக்குச் சொந்தமாக இருந்த 13.5 ஏக்கர் காணி போருக்குப் பின்னர் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் 9 பரப்புக் காணி பொது நூலகத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 10 வருட கால போராட்டத்தின் விளைவாக அதில் 5 பரப்புக் காணியே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

அதனால் கிளிநொச்சி பொதுநூலகம் கடந்த 13 வருடங்களாக வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகிறது. கிளிநொச்சி மாவட்ட அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான பொதுநூலகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்பது கல்விப் புலத்தினரின் நீண்டகாலப் பேரவா.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தை மையமாகக் கொண்டு புதிய நகர மையம் உருவாக்குவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய புதிய நூலகத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியை புதிதாக நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் அனைத்தும் கைகூடியுள்ள போதும், நூலக அமைவிடத்துக்கான காணி முழுமையாக விடுவிக்கப்படாதுள்ளதால் வேலைத்திட்டங்களை முழுமைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே கிளிநொச்சி கல்வித்துறை வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் இந்தக் காணியை முழுமையாக விடுவித்துத் தரவேண்டும் - என்றுள்ளது. (ச-113)

### கணேசா முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்., ஜூலை 26

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையின் விரிவுரையாளர் கலாநிதி. ஆறுமுகம் மஞ்ஜீவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன் மற்றும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் ம.சசிக்குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச-ரி2-66)

## ஓட்டோ - பட்டா விபத்து மந்திகையில் சம்பவம்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

'பட்டா' ரக வாகனமும், ஓட்டோவும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்து மந்திகையில் நேற்று இடம்பெற்றுள்ளது.



நெல்லியடியில் இருந்து மந்திகை நோக்கி சென்றுகொண்டிருந்த ஓட்டோவும், மந்திகையில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'பட்டா' ரக வாகனமும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்தது. விபத்துக்குள்ளான ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து நீண்டதூரம் இழுத்துச் செல்லப்பட்டு தலைகீழாகப் புரண்டது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் பெரியளவு காயங்களோ, உயிர்ச் சேதமோ ஏற்படவில்லை. விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-இ)

## 175 இ.போ.ச. பஸ்கள் பழுதுநீக்கி சேவையில்

பொருளாதார இடர் காரணமாக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட இ.போ.ச.வுக்குச் சொந்தமான 175 பேருந்துகளை பழுதுபார்த்து மீண்டும் சேவையில் அமர்த்துவது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இதுதொடர்பான ஆவணங்களை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள், உதிரிப்பாகங்களின் தட்டுப்பாடு மற்றும் கொள்வனவில் நிதி நெருக்கடி ஆகியவை காரணமாக பல இ.போ.ச. பேருந்துகள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டன. 3 வருடங்களுக்கு மேலாக சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த 852 பேருந்துகளில் 400 பேருந்துகளை பழுதுபார்க்கும் வேலைத்திட்டம் திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் 175 பேருந்துகளின் திருத்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த 175 பேருந்துகளில் 15 பேருந்துகள் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காகவும் மற்றைய பேருந்துகள் பயணிகள் போக்குவரத்துக்கும் அந்தந்த சாலைகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-26)


**காணி, வீடு விற்பனைக்கு**

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியில் 2 பரப்பு 17 குளி விஸ்தீரணம் உள்ள வீடும், காணியும் விற்பனைக்குண்டு.

076 1598 003
076 940 1045

**பணியாளர் தேவை**

யாழ்.நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு

✓ Receptionist
✓ Customer Service

ஆகிய இரண்டு பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (பெண்கள் மட்டும், யாழ்.நகரிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

077 353 3809, 075 920 4650

(CS/51403)AH-

**காணி விற்பனைக்கு**

தும்பளை (பருத்தித்துறை) யில் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CS/51360) AH-1

076 037 1963

**வீடு வாடகைக்கு**

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தில் வீடு ஒன்று வாடகைக்குண்டு.

077 711 0869

(CS/51404)AH-1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் **25 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

* குடியிருப்புக்கள் சூழவுள்ளபகுதி
* செம்மண், நன்னீரூற்று
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* பலாலி வீதியிலிருந்து 1 km தூரம்
* ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் (550,000/=)
* நிலாவரை கிணற்றிலிருந்து 2 km தூரம்

**தொடர்பு: 076 057 0354, 076 826 0354**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.